ஈழத்தின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No : P 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 10.07.2023 திங்கட்கிழமை | இதழ் : 213 | பக்கங்கள் : 16

மட்டக்களப்பு சென்ற பஸ்

# ஆற்றில் விழுந்து விபத்து 10 பேர் உயிரிழந்தனர்!

## 40 பேர் மருத்துவமனைகளில்

மட்டக்களப்பு, ஜூலை 10

**70 பயணிகளுடன் மட்டக்களப்பு - காத்தான்குடி நோக்கி வந்த பேருந்து ஆற்றில் வீழ்ந்ததில் 10 பேர் உயிரிழந்தனர். 40பேர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.**

நேற்றிரவு 8 மணிக்கு சற்று முன்னதாக பொலநறுவை மன்னம்பிட்டி பாலத்தில் இந்த விபத்து இடம்பெற்றதாக அறிய வருகின்றது.

பொலநறுவை - கதுரவெல நகரத்தில் இருந்து மட்டக்களப்பின் காத்தான்குடி நகரத்துக்கு போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட பேருந்தே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது. சிறுவர்கள், குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் என 70 பேர் இந்தப் பேருந்தில் பயணித்தனர்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து பாலத்தை விட்டு விலகி ஆற்றில் பாய்ந்தது. இதில் ஒரு பெண், 9 ஆண்கள் என 10 பேர் உயிரிழந்தனர். 40 பேர் மீட்கப்பட்டனர்.

பொலிஸாரும் அப்பகுதி மக்களும் இணைந்து மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். நீண்ட நேர போராட்டத்தின் பின்னர் இரவு 11 மணியளவில் மீட்பு நடவடிக்கைகள் நிறைவுக்கு வந்தன. காணாமல் போன பலர் மீட்கப்பட்டதுடன், ஆற்றில் பாய்ந்த பேருந்தும் மீட்கப்பட்டது.

இந்த விபத்துக் குறித்து மன்னம்பிட்டி பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)



## இலங்கையரான தந்தை, மகன் இத்தாலியில் நீரில் மூழ்கி பலி!

ரோம், ஜூலை 10

இத்தாலியில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தந்தையும் மகனும் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தனர்.

இந்தத் துயரச் சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை இத்தாலியின் பியசென்ஸா மாகாணத்தில் உள்ள ட்ரெபியா ஆற்றில் இடம்பெற்றுள்ளது.

கடும் கோடை வெப்பம் காரணமாகக் கடற்கரைகள் மற்றும் நீர் நிலைகளில் குளிக்கச் செல்வோரின் எண் ணிக்கை அதிகரித்து வருகிறது. உயிரிழந்த

15

# சமஷ்டியே தீர்வு

## இதனையே இந்தியா வலியுறுத்த வேண்டும்

மோடிக்கான கடிதத்தை இன்று அளிக்கிறது த. தே. ம. முன்னணி!

யாழ்ப்பாணம், ஜூலை 10

தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு சமஷ்டி முறை தீர்வை இந்தியா வலியுறுத்த வேண்டும். இதனை இந்தியாவுக்கு வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்த வேண்டும் என்று கோரும் கடிதத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இன்று திங்கட்கிழமை இந்திய தூதரகத்திடம் கையளிக்கவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 20ஆம் திகதி உத்தியோகபூர்வ பயணமாக

15

## மாகாண அமைச்சு பொறுப்பை எம். பிக்களுக்கு மாற்றத் திட்டம்

ஜனாதிபதி ரணில் ஆலோசனை

கொழும்பு, ஜூலை 10

மாகாண சபைகளின் கீழிருந்த அமைச்சுப் பொறுப்புகளை அதே அதிகாரத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை

15



## தாடியால் வாகனத்தை கட்டி இழுத்து சாதனை

யாழ்ப்பாணம், ஜூலை 10

7 நிமிடங்கள் 48 செக்கன்களில் ஆயிரத்து 550 கிலோ கிராம் எடை கொண்ட வாகனத்தை 400 மீற்றர் தூரம் தாடியால் இழுத்து சென்று சாதனை படைத்துள்ளார் தென்மராட்சி மட்டுவிலைச் சேர்ந்த 59 வய தான செ. திருச்செல்வம்.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின்

15

## பொலிஸ் மா அதிபருக்கு மேலும் மூன்று மாத நீடிப்பு

கொழும்பு, ஜூலை 10

பொலிஸ் மா அதிபராக பதவியில் தொடர் சி. டி. விக்ரமரத்னவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூன்று மாத கால அவகாசத்தை வழங்கியுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்தப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸின் பரிந்துரையின் பேரில் இந்த கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, புதிய பொலிஸ் மா அதிபரை

15

## ஜனாதிபதியின் இந்திய நிகழ்ச்சி நிரல் வெளியீடு

கொழும்பு, ஜூலை 10

ஜனாதிபதியாக பதியேற்று சரியாக ஒரு வருட நிறைவில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க டில்லியில் சந்திக்கிறார்.

இதற்கான விசேட ஏற்பாடுகள் மற்றும்

15

அஸ்வெசும நலன்புரி திட்டம்:

## மேன்முறையீட்டு காலம் இன்றுடன் நிறைவடைவு

கொழும்பு, ஜூலை 10

அஸ்வெசும நலன்புரி திட்டம் தொடர்பான மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை செய்வதற்கான கால அவகாசம் இன்று திங்கட்கிழமையுடன் நிறைவடைகின்றது.

இதுவரை 8 இலட்சத்து 35 ஆயிரம் மேன்முறையீடுகளும் 11 ஆயிரத்துக்கும் அதிகமான ஆட்சேபனைகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும

15



## நவாலி படுகொலை; 28ஆவது நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 10

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமானத் தாக்குதலில் உயிரிழந்த 147 பேரின் 28ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று ஞாயிற்றுக்கிழமை நினைவு கூரப்பட்டது.

இந்த நினைவேந்தல் சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் பங்குத்தந்தை தலைமையில் நடைபெற்றது.

15

# குண்டுதுளைக்காத கவசத்துடன் பராக்கிரமம் காட்டுகிறார் வீரசேகர

## தமிழ்த் தேசியக் கட்சி

கொழும்பு, ஜூலை 10

சரத் வீரசேகர எம். பி. குண்டு துளைக்காத கவசத்தை அணிந்தபடி பராக்கிரமம் காட்டுகிறார் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.

இது சிங்கள - பௌத்த நாடு என்பதை நீதிபதிகளும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்ற சாரப்பட பாராளுமன்றில் சரத் வீரசேகர ஆற்றிய உரை குறித்து சிறீகாந்தா விடுத்த அறிக்கையிலேயே மேற்படி தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில், “குருந்தூர்மலை ஆலய விவகாரம் என்பது, முல்லைத்தீவு நீதிமன்றத்தின் முன்னால் ஒரு வழக்காக இப்போதும் இருக்கையில், அந்த வழக்கு தொடர்பான விடயங்களை பிரஸ்தாபித்தும் நீதிபதியின் நடவடிக்கைகளை விமர்சித்தும் பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர மிக மோசமான இனவாத கருத்துகளை தனது சிறப்புரிமை என்கின்ற குண்டு துளைக்காத கவசத்தை அணிந்தபடி பாராளுமன்றத்தில் வெளியிட்டிருப்பது மிக மட்டரகமான கோழைத்தனமாகும்.

ஒரு நீதிபதியின் கடமைவழி நடவடிக்கைகளைப் பற்றி பிரஸ்தாபித்து விவாதிப்பதானால், அதற்கென தனியான ஒரு பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட வேண்டும். அதை செய்ய முயற்சிக்காமல், பாராளுமன்ற சிறப்புரிமையை துஷ்பிரயோகம் செய்து, வக்கிரம் நிறைந்த இனவாத சிந்தனையை சரத்வீரசேகர பாராளுமன்றில் கக்கியிருக்கின்றார்.

பாராளுமன்றத்தில் மிகக் குறைவான உறுப்பினர்கள் சமூகமளித்திருந்த சூழ்நிலையில், தனது பராக்கிரமத்தை தனக்கே உரிய பாணியில் சரத்வீரசேகர நிரூபிக்க முயன்று, ஒட்டுமொத்த நீதித் துறையின் சுதந்திரத்துக்கும் சவால் விடுத்திருக்கின்றார்.

இது எப்படி அனுமதிக்கப்பட்டது என்பது ஆச்சரியமளிக்கின்றது.

இந்த விடயத்தில், நீதித் துறையின் சுதந்திரத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் மதிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், கட்சி மோதல்களையும் இன, மத வேறுபாடுகளையும் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு, பொறுப்புணர்ச்சியோடு தமது எதிர்ப்பை வெளிப்படுத்த முன்வரவேண்டும்.

நாட்டின் சகல சட்டத்தரணிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இந்த விவகாரத்தில் தகுந்த நடவடிக்கைகளை விரைவாக எடுக்கும் என்றே எதிர்பார்க்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# நாட்டின் சுகாதார துறை பெரும் நெருக்கடிக்குள்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஜூலை 10

நாட்டின் சுகாதாரத் துறை நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளது. சுகாதாரத் துறையில் 5 பெரும் பிரச்னைகள் எழுந்துள்ளன. மேலும், இந்தப் பிரச்னைகளுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு,

சுகாதாரத் துறையில் 5 பெரும் பிரச்னைகள் எழுந்துள்ளன. மருந்து தட்டுப்பாடு இதிலுள்ள முக்கியமான பிரச்னையாகும். மறுபுறம் மருந்தின் தரம் தொடர்பில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. பதிவு செய்யப்படாத மருந்துகளை நாட்டுக்கு கொண்டு வந்துள்ளமையால் பிரச்னைகள் எழுந்துள்ளன.

விலைமனு கோரல் செயல்பாடுகள் உரிய முறையில் இடம்பெறுவதில்லை. அவ்வாறு உரிய முறையில் விலைமனு மேற்கொள்ளப்படாமல் மருந்துகளை கொள்வனவு செய்துள்ளமையால் மருந்தின் தரம் தொடர்பில் பிரச்னைகள் எழுந்துள்ளன.

இதேவேளை ரூபாயின் பெறுமதி அதிகரிக்கும்போது அதன் பிரதிபலன்கள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். இருப்பினும், அவை மக்களை சென்றடைவதில்லை. மனித வளம் தொடர்பானவை நான்காவது பிரச்னையாகும்.

விசேட மருத்துவ நிபுணர்கள் நாளுக்கு நாள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். புதிதாக நியமனம் பெறும் மருத்துவர்கள்கூட நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். அத்துடன் மருத்துவமனைகளில் மருத்துவ இயந்திரங்கள் செயல்படுவதில்லை. சுகாதார அமைச்சர் கூறும் விடயங்கள் கேலிக்கான விடயங்களாக மாறியுள்ளன - என்றார். (ஐ)

# அறகலய போராட்டம்: புத்தகங்கள் எழுதும் அரசியல்வாதிகள்!

கொழும்பு, ஜூலை 10

கடந்த வருடம் இடம்பெற்ற ஜூலை 9 சம்பவம் தொடர்பாக அரசியல்வாதிகள் எழுதி வரும் நூலால் பரபரப்பு காணப்படுகிறது என்று தென்னிலங்கை தரப்புகள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன கடந்த வருடம் ஜூலை 9 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் குறித்து நூல் ஒன்றை எழுதி வருகிறார்.

இந்த விடயம் தொடர்பாக விமல் வீரவன்ச எழுதிய நூல் அரசியல் அரங்கில் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது. அதனால்தான் வஜிர என்ன எழுதுகிறார் என்ற கேள்வி அரசியல் வட்டாரத்தில் எழும்பத் தொடங்கியுள்ளது.

உதய கம்மன்பில மற்றும் முன்னாள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவின் பிரத்தியேக செயலாளர் சுகீஸ்வர பண்டார ஆகியோரும் இந்தத் தொடர் நிகழ்வுகள் தொடர்பான நூல்களை எழுதி வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

நூல் எழுதுவது ஒருபுறமிருக்க, இந்த சம்பவம் குறித்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இதுவரை எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 3 ஆயிரம் பேருக்கு ஒரு நீதிபதி நீதிமன்றங்களும் போதாது!

## நீதி சேவை ஆணைக்குழு

கொழும்பு, ஜூலை 10

நாட்டில் நீதிமன்ற வழக்குகள் நீண்ட காலதாமதம் ஏற்படுவதற்கு நாட்டின் மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது போதுமான நீதிபதிகள் மற்றும் நீதிமன்றங்கள் இல்லாததே காரணம் என்று நீதிச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டின் மொத்த மக்கள் தொகையின் - 222 இலட்சம் தொடர்பான வழக்குகளை கையாள்வதற்கு அனைத்து நீதிமன்றங்களிலும் உள்ள நீதிபதிகளின் எண்ணிக்கை 399 ஆகும். இதன்படி, ஒரு நீதிபதி 53 ஆயிரம் பேருக்கு சேவை செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாடு முழுவதும் உள்ள சட்ட விவகாரங்களைக் கையாள்வதற்கு தற்போது உள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்றும், குறைந்தது 140 புதிய நீதிமன்றங்களை நிறுவாமல், தற்போதுள்ள வழக்கு நெருக்கடிகளுக்கு தீர்வு காண முடியாது என்றும் நீதிச் சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(ஐ-சி)

# புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் பெருந்திருவிழா

வடமராட்சி,ஜூலை 10

பருத்தித்துறை புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் கோவிலின் பெருந்திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 20 ஆம்திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பை ரதத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8 30 மணிக்கு தேர்த் திருவிழாவும் அடுத்தநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

(ஐ-02)

# கணினி குற்றப் பிரிவில் டயானா முறைப்பாடு!

கொழும்பு, ஜூலை 10

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே, பொலிஸ் கணினி குற்றப் பிரிவின் தலைவருக்கு முறைப்பாடு ஒன்றை வழங்கியுள்ளார். சமூக ஊடகங்களில் பரவி வரும் குரல் பதிவை அகற்றுமாறு கோரியே அவர் இந்த முறைப்பாட்டை முன்வைத்துள்ளார்.

தன் தொடர்பில் அவதூறான கருத்துகள் அந்த குரல் பதிவில் உள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். ஒரு குறிப்பிட்ட நபர் தமக்குத் தொடர்ந்தும் இடையூறு விளைவிக்கும் வகையில் அழைப்புகளை மேற்கொண்டு வருகிறார் என்றும் அவர் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ)

# 25 வருடங்களாக ஒரே நிறுவனத்திடம் ரயர்களை வாங்கிய அரச நிறுவனம்!

கொழும்பு, ஜூலை 10

போக்குவரத்து சேவையை முன்னெடுக்கும் அரச நிறுவனம் ஒன்று சுமார் 5,000 வாகனங்களுக்கு தேவையான ரயர் விநியோக உரிமையை கடந்த 25 வருடங்களாக ஒரே நிறுவனத்திடம் மட்டுமே வழங்கியுள்ளதாக அறிய வருகின்றது.

இது தொடர்பான விபரம் அண்மையில் அமைச்சால் நடத்தப்பட்ட கணக்காய்வு விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

பின்னர் அமைச்சு இந்த உத்தரவை இரத்து செய்து, திறந்த ஒப்பந்த முறை மூலம் ரயர்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க தொடர்புபட்ட சபைக்கு அறிவுறுத்தியுள்ளது.

அங்கு பெறப்பட்ட ஒப்பந்தங்களின் விலையைக் கருத்தில் கொண்டு, 25 ஆண்டுகளாக ரயர் விநியோகம் செய்து வரும் விநியோகஸ்தர் 2,000 ரூபாய்க்கு குறைவாக ரயர்களை வழங்கவும், அந்த வகை ரயர்களை முன்னைய விநியோகஸ்தர்களின் ரயரை விட சுமார் 8,000 கிலோ மீற்றர் அதிகமாக பயன்படுத்த முடியும் என்று தொடர்புடைய அமைச்சின் பேச்சாளர் எமது ஊடகத்திடம் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக எதிர்காலத்தில் திறந்த ஒப்பந்த முறையில் ரயர்களை வாங்க தொடர்புடைய முன்னணி போக்குவரத்துச் சபை செயல்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இ. போ. சவின் வருமானம் ஒருநாளில் ரூ. 15.8 கோடி!

கொழும்பு, ஜூலை 10

இலங்கை போக்குவரத்து சபையின் நாளாந்த வருமானம் 15. 8 கோடி ரூபாய் வரை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாளாந்தம் 12 இலட்சம் பயணிகள் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளில் பயணிக்கின்னர் என்று இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

சுற்றிவளைப்புகள் அதிகரித்தமையால், வருமானம் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
10.07.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகின்றனரா?

யுத்தம் நிறைவுற்று 14 வருடங்களாகிவிட்டன. எத்தனையோ விடயங்கள் பேசியாகிவிட்டது. 2009இல் யுத்தம் நிறைவுற்றதைத் தொடர்ந்து இறுதி யுத்தத்தின்போதான அத்துமீறல்கள் பேசுபொருளானது. உரிமைசார் அரசியல் போராட்டம், நீதிக்கான போராட்டம் என்னும் தோற்றத்தைப் பெற்றது. 2012இல் அமெரிக்க அனுசரணையில் இலங்கைமீதான பொறுப்புக்கூறல் பிரேரணை முன்வைக்கப்பட்டது. தமிழ் மக்களின் அரசியல் விவகாரம் புதியதொரு பரிமாணத்தை பெற்றது. மனித உரிமைகள்சார் அழுத்தங்கள் இன்றுவரையில் தொடர்கின்றன.

ஆனால், குறிப்பிட்டு சொல்லக்கூடியளவிலான மாற்றங்கள் எவையும் ஏற்படவில்லை. ஆனால், மறுபுறம் அரசாங்கங்களோ அவற்றின் நிகழ்ச்சி நிரலில் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அரச இயந்திரம் அதன் செயல்பாடுகளை முன்னரைப் போன்றே முன்னெடுத்து வருகின்றது. இப்போது, ரணில் அதில் மாற்றங்களை ஏற்படுத்தும் ஒருவர் போன்று காட்சியளிக்கின்றார். ஆனால், இது ஒரு தற்காலிக ஏற்பாடு மட்டுமேயாகும். ரணிலுக்கு பின்னர் அதிகாரத்துக்கு வருபவர் எவ்வாறு நடந்துகொள்வார்? ஏனெனில், அரசியல் மாற்றங்களென்பது தனிநபர்களின் தலையீடுகளால் ஏற்படுவதல்ல – மாறாகக் கட்டமைப்புசார் மாற்றமாக ஏற்பட வேண்டும்.

தமிழ் மக்கள் காலத்துக்கு காலம் பலவாறான நம்பிக்கையால் வழிநடத்தப்பட்டிருக்கின்றனர். ஒவ்வொரு காலகட்டங்களிலும் ஒரு கட்சி அல்லது அமைப்பு இவ்வாறான நம்பிக்கைகளின் முகமாக தொழில்பட்டிருக்கின்றது. ஆனால், செல்வநாயகம் தொடக்கம் சம்பந்தன் வரையிலான காலப்பகுதியில் தமிழ் மக்கள் அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் எதனையும் அடையவில்லை. இது ஒருபுறம் என்றால் இயக்க அரசியலாலும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கம் பலமானதோர் இராணுவக் கட்டமைப்புடன், பேரம்பேசும் பலத்தை நிரூபித்திருந்த போதும்கூட – அதுவும் இறுதியில் தோல்வியிலேயே முடிவுற்றது. இந்தப் பின்புலத்தில் நோக்கில் அனைத்து நகர்வுகளிலும் சிங்கள ஆளும் தரப்பே வெற்றிபெற்றிருக்கின்றது.

யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் சர்வதேச அழுத்தங்களின் மூலம் சில மாற்றங்கள் நிச்சயம் நிகழுமென்னும் நம்பிக்கை ஊட்டப்பட்டது. இப்போதும் நம்பிக்கை ஊட்டப்படுகின்றது. ஆனால், சிங்கள ஆட்சியாளர்களோ இவ்வாறான அழுத்தங்களை அலட்டிக்கொள்ளாமல் தங்களின் கருமங்களை முன்னெடுத்து வருகின்றனர். ஆனால், அழுத்தங்களை பிரயோகிப்பதாகக் கூறப்படும் மேற்குலக நாடுகளோ இந்த விடயங்கள் தொடர்பில் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. இந்த இடத்தில் ஓர் உண்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் கரிசனையை காண்பிக்கும் வெளித்தரப்புக்கள் அனைத்துதே, பாதிப்பை ஏற்படுத்தியதாக கூறப்படும் சிங்கள ஆளும் தரப்பையும் அதற்குப் பின்னாலுள்ள மக்களையும் விரோதித்துக் கொள்ளக்கூடாதென்னும் புரிதலோடுதான் ஒவ்வொரு விடயங்களையும் முன்னெடுத்து வருகின்றனர். இதன் காரணமாகவே அவர்களின் அழுத்தங்கள் ஒரு கட்டத்துக்கு மேல் செல்வாக்குச் செலுத்தவில்லை.

இதனைப் புரிந்துகொள்ளாமல் சர்வதேச அழுத்தங்கள் தொடர்பில் அளவுக்கு அதிகமான நம்பிக்கைகளை விதைக்கக்கூடாது. இன்றைய உலக அரசியல் சூழலில் அரசுகள் பல்வேறு விடயங்களை சுயாதீனமாக முன்னெடுக்கக்கூடிய சூழல் வலுவடைந்திருக்கின்றது. சிறிய நாடுகள் ஒரே நேரத்தில் பல பலம்பொருந்திய நாடுகளுடன் உறவாடுவதன் ஊடாக ஒன்றின் அழுத்தங்களை இன்னொன்றின் மூலம் தடுக்கும் அல்லது சமநிலைப்படுத்தும் உத்திகளை தாராளமாகவே கையாள முடியும். இலங்கையின் வெளிவிவகார அணுகுமுறை இந்த அடிப்படையைக் கொண்டதுதான். ஆனால், மறுபுறம் இந்த வாய்ப்புகள் தமிழ் மக்கள் போன்ற சிறிய பலவீனமான உணர்வு அரசியலுக்குள் சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்கும் மக்கள் கூட்டமொன்றுக்கு இல்லை. இதனைப் புரிந்துகொண்டு அரசியலை முன்னெடுக்கும் திறமையோடு ஆளுமையோடு நபர்களும் கட்டமைப்புகளும் தமிழ் மக்கள் மத்தியில் இல்லை. இந்த இடைவெளியில்தான் அனைத்தும் நடந்தேறிக் கொண்டிருக்கின்றது. இந்த பின்புலத்தில் நோக்கினால் தமிழ் மக்கள் மீது கரிசனையுள்ள தரப்புகளாக தங்களை காண்பித்துக் கொள் வோர்கள் அனைவராலும் – தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர் – என்னும் முடிவுக்கே நாம் வரவேண்டியிருக்கின்றது.

# மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்காக இணையுங்கள்

**வடிவேல் சுரேஷ் எம். பி.**

பதுளை, ஜுலை 10

மலையக மக்கள் கடந்த 200 வருடங்களாக முகங்கொடுத்து வரும் பிரச்னைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அதற்காகவே முழு மூச்சாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இருப்பினும் இந்த பிரச்னைகளுக்கு தனித்து செயல்பட முடியாது. அனைவரும் ஒரு அணியாக, ஒரு குடையின் கீழ் ஒன்றிணைய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் தெனியாய பகுதியில் இடம்பெற்ற நடமாடும் மக்கள் சேவையில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அஸ்வெசும திட்டத்தில் புறக்கணிப்பு, காணிப் பிரச்னைகள், இனவாத புறக்கணிப்புகள், நலன்புரி கொடுப்பனவு வழங்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு துன்பங்களை எமது மக்கள் அனுபவித்து வருகின்றனர். இவற்றையெல்லாம் வெற்றிகொள்ள நாம் ஒன்றுபட வேண்டும்.

அஸ்வெசும வேலைத்திட்டத்தில் உள்வாங்குவாதக் கூறி எமது மக்கள் புறக்கணிக்கப்பட் டுள்ளார்கள். தகுதியற்றவர்கள் இணைக்கப்பட்டு தகுதியானவர்கள் புறக்கணிக்கப்பட்டு ள்ளார்கள். இறுதியில் புறக்கணிப்புகள் மாத்திரமே எமக்கு எஞ்சியுள்ளது. அஸ்வெசும திட்டத்தில் அநீதி இழைக்கப்பட்டிருந்தால் குறிப்பாக அதில் பிரிவினைவாதம் அல்லது இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு எமது மக்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தால் எவ்வாறான தீர்மானங்களை முன்னெடுப்பது என்பது தொடர்பில் ஜனாதிபதி ஆலோசகருடன் கலந்துரையாடுவோம்.

இதேவேளை, பிரச்னைகளை தீர்க்க வேண்டும் என்றால் தினமும் கலந்துரையாடல்களை மாத்திரம் மேற்கொள்வதன் மூலம் தீர்வு கிடைக்காது. நாம் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும். அனைவரும் ஒன்றுபட வேண்டும். ஓர் அணியாக ஒரு குடையின் கீழ் ஒன்றிணைந்து செயல்பட்டால் மாத்திரமே தீர்வு கிடைக்கும். நாமே எமது மக்களுக்கு பாதுகாப்பு அரணாக செயற்பட வேண்டும். அந்த அடிப்படையிலேயே நாங்கள் முழு மூச்சாக போராடிக்கொண்டி ருக்கிறோம்.

இதேவேளை, எனது மக்களை பாதுகாக்க ஒரு முறைமையை பின்பற்ற வேண்டும் என நினைக்கிறேன். அதற்கான சந்தர்ப்பமொன்று தற்போது ஏற்பட்டுள்ளது. நான் அணுகியுள்ள இந்த முறைமை சிறப்பானது என கருதுகிறேன். இந்த முறைமையின் கீழ் எனது சமூகத்தை காப்பாற்றிக் கொள்வதோடு, எமது இருப்பை பாதுகாத்துக் கொள்ளவும் இது வழிவகுக்கும் - என்றார். (ஐ)

# பறிக்கப்பட்ட உறுப்புரிமையை சந்திரிகாவுக்கு மீளவழங்க முடிவு

## சிறீலங்கா சுதந்திரக் கட்சி அறிவிப்பு



கொழும்பு, ஜுலை 10

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் ஆதரவு எமக்கு நிச்சயம் தேவை. கடந்த ஆண்டு அவர் உள்ளடங்கலாக மேலும் 9 பேரது கட்சி உறுப்புரிமை தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டது. அந்த தீர்மானத்தை மீளப்பெற்று அவர்களை மீண்டும் கட்சியில் இணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 15ஆம் திகதி சுதந்திர கட்சியின் நிறைவேற்றுக்குழுவும் , மத்திய குழுவும் கூடவுள்ளது. இதன் போது கடந்த ஆண்டு கட்சி உறுப்பு ரிமை தற்காலிகமாக நீக்கப்பட்ட 9 பேர் தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளது. தற்காலிகமாக கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டவர்களில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமார துங்கவும் உள்ளடங்குகின்றார்.

அவர் சு.க.வின் சிரேஷ்ட ஆலோசகராகப் பணியாற்றியிருக்கின்றார். எனவே அவருக்கும் மீள அழைப்பு விடுக்கப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். அவர் இந்த கட்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருக்கின்றார். அவர் பரிந்துரைத்ததன் பின்னணியிலேயே மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த காலங்களில் எமக்கு பெரும் பலமாக அமைந்த அவரின் ஒத்துழைப்புக்கள் மீண்டும் சுதந்திர கட்சிக்கு தேவையாகும். எனவே மீண்டும் கட்சியுடன் இணைவது குறித்து அவர் சிந்திக்க வேண்டும். அவ்வாறு அவர் இணைவாரானால் நாம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வோம் - என்றார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# வருமான வரித்துறையினரால் அச்சத்தில் தி. மு. க. அமைச்சர்கள்

தூத்துக்குடி, ஜூலை 10

வருமான வரித்துறை, அமுலாக்கத்துறையின் அதிரடி நடவடிக்கையால் தி. மு. க. அமைச்சர்கள் பயத்தில் இருக்கின்றனர் என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பழனிசாமி விமர்சித்துள்ளார்.

திமுக ஆட்சிக்கு வந்த பின்னர் தங்கள் கட்சி வழக்கறிஞர்களை அரசு வழக்கறிஞராக நியமித்தனர். அவர்கள் நீதிமன்றத்தில் சரியான முறையில் வாதத்தை எடுத்து வைக்காததும், முழுமையான ஆதாரத்தை சமர்ப்பிக்காததும்தான் இப்போதுள்ள அமைச்சர்கள் பலர் விடுதலையாவதற்கு காரணம். வரும் மக்களவை தேர்தலுக்கான பூர்வாங்க பணிகளை தொடங்கி விட்டோம்.

வருமான வரித்துறை, அமலாக்கத்துறையின் அதிரடி நடவடிக்கை காரணமாக சுமார் 20 நாட்களாக தி. மு. க. அமைச்சர்கள் பயந்து கொண்டிருக்கின்றனர்.

நாங்கள் யாருக்கும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. எங்களுக்கு மடியில் கனம் இல்லை. எனவே, வழியில் பயம் இல்லை. நாங்கள் யாருக்கும் அடிமை இல்லை. 1999இல் பா. ஜ. கவுடன் தி. மு. க. கூட்டணி வைத்திருந்தது. தற்போது காங்கிரஸுடன் கூட்டணியில் உள்ளது. அவர்களுக்கு கொள்கை என்பதே இல்லை. அதிகாரமும் பதவியும் இல்லாமல் தி. மு. கவினருக்கு தூக்கம் வராது.

தற்போதைய தி. மு. க. ஆட்சியில் காய்கறிகளின் விலை உட்பட அனைத்து பொருட்களின் விலைவாசியும் 70 சதவீதம் உயர்ந்துள்ளது. ஏழை மற்றும் நடுத்தர மக்கள் மிகுந்த வேதனைப்படுகின்றனர். அரசு மருத்துவமனைகளில் சரியான மருத்துவம் இல்லை. திறமையற்ற அரசுதான் இதற்கு காரணம் - என்றார். (ஐ)

# கீழடியில் தங்க அணிகலன்கள் முதன்முறையாக மீட்கப்பட்டன

சென்னை, ஜூலை 10

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கீழடியில் தொல்லியல்துறை இணை ஆணையர் சிவானந்தம் மீண்டும் பொறுப்பேற்றதை அடுத்து, அகழாய்வு பணி தீவிரப்படுத்தப்பட்டது. இதுவரை தங்க அணிகலன், சுடுமண் காளை உட்பட 183 தொல்பொருட்கள் கண்டறியப்பட்டன.

கீழடி, கொந்தகை, அகரம், மணலூர் ஆகிய 4 இடங்களில் ஏற்கனவே 8 கட்ட அகழாய்வு பணிகள் முடிவடைந்தன. இதில் கண்டறியப்பட்ட பல ஆயிரம் தொல்பொருட்கள் கொந்தகையில் கீழடி அகழ் வைப்பகத்தில் வைக்கப்பட்டு, பொதுமக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் மீண்டும் தொல்லியல்துறை இணை இயக்குநராக சிவானந்தம் பொறுப்பேற்றதை அடுத்து, அகழாய்வு பணி தீவிரப்படுத்தப் பட்டது. இதுவரை கீழடியில் 9 குழிகள் தோண்டப்பட்டன.

இதில் தங்க அணிகலன், அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சூடுமண்ணால் செய்யப்பட்ட காளை போன்ற விலங்கின உருவங்கள், ஆட்ட காய்கள், வட்டச் சில்லுகள், கண்ணாடி மணிகள், செப்பு ஊசி, எலும்பினால் செய்யப்பட்ட கூர்முனைகள், இரும்பு ஆணிகள் என 183 தொல்பொருட்கள் இதுவரை கண்டறியப்பட்டன.

மேலும் 9 குழிகளில் நான்கில் 35 செ.மீ., ஆழத்தில் களிமண், சுண்ணாம்பு கலவையால் அமைக்கப்பட்ட தரைத்தளம் கண்டறியப்பட்டன. இந்தத் தரைத்தளம் 3 செ.மீ. முதல் 6 செ.மீ., தடிமன் கொண்டதாக உள்ளன. மேலும் இந்த தரைத் தளத்துக்கு கீழே 2 அடி ஆழத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கறுப்பு, சிவப்பு பானை ஓடுகள் குவியலாக கண்டறியப்பட்டன.

இதுதவிர துளையிடப்பட்ட பானை ஓடுகள், அழகிய வேலைப்பாடுகள் கெண்ட பானை ஓடுகள், பானை குறியீடுகள் கண்டறியப்பட்டன. இங்கு வெவ்வேறு நிலைகளில் இருந்து சேகரிக்கப்பட்ட எலும்பு, கரி மாதிரிகள் அறிவியல் பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன. (ஐ)

# ராகுல் காந்தி பிரதமரானால் மோடி, அமித்ஷா சிறை செல்வர்

## புதுச்சேரி காங்கிரஸ் தலைவர்

புதுச்சேரி, ஜூலை 10

ராகுல் காந்தி எம். பி. பதவியில் இருந்து தகுதி இழப்பு செய்யப்பட்டதை கண்டித்து புதுச்சேரியில் காங்கிரஸ் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

புதுச்சேரி அண்ணா சிலை அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மாநிலத் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி. தலைமை தாங்கினார். முன் னாள் முதல்வர் நாராயணசாமி, முன்னாள் அமைச்சர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

இதில் நாராயணசாமி பேசியதாவது,

கடந்த 9 ஆண்டுகால மோடி ஆட்சியில் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. காங்கிரஸ் மீது ஊழல் குற்றசாட்டு கூறும் பிரதமர் நரேந்திர மோடி பா. ஜ. க. ஆளும் மாநிலங்களின் முதல்வர்கள் ஊழல் குற்றச்சாட்டு மீது நடவடிக்கை எடுக்காதது ஏன் என விளக்க வேண்டும்.

மோடியும் அதானியும் நெருங்கிய நண்பர்கள். அதானி உலக பணக்காரராக உயர்வதற்கு பிரதமர் மோடி உதவினார். அது குறித்து கேட்ட போதுதான் ராகுல் காந்தியின் பதவி பறிக்கப்பட்டது. ஆனால், பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ராகுல் காந்தி மக்களுக்காக போராடுவார்.

நாட்டில் விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவிட்டதால் மக்கள் பிரதமர் மோடி மீது அதிருப்தியில் உள்ளனர். வரும் 2024 மக்களவைத் தேர்தலில் மதசார்பற்ற கூட்டணி ஆட்சிக்கு வந்தால் ராகுல் காந்தி நாட்டின் பிரதமரானால் முதலில் நரேந்திர மோடி, அமித் ஷா இருவரும் சிறைக்கு செல்வார்கள்.

திகார் சிறையில் இருவருக்கும் இடமிருக்கிறது. புதுச்சேரி மாநிலத்தில் கடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் என். ஆர். காங்கிரஸ் - பா. ஜ. க. அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப் படவில்லை - என்றார். (ஐ)

# தமிழக அரசியல் சூழல் குறித்து அமித் ஷாவுடன் ஆளுநர் பேச்சு!

சென்னை, ஜூலை 10

டில்லி சென்றுள்ள தமிழக ஆளுநர் ஆர். என். ரவி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்து, தமிழக அரசியல் சூழல், செந்தில் பாலாஜி விவகாரம் தொடர்பாக ஆலோசனை நடத்தினர் என்று கூறப்படுகிறது.

சட்டவிரோதப் பணப் பரிமாற்ற வழக்கில், அமுலாக்கத் துறையால் கைது செய்யப்பட்ட செந்தில் பாலாஜி, இலாகா இல்லாத அமைச்சராக தொடர்வார் என்று தமிழக அரசு பரிந்துரைத்ததை ஆளுநர் ஆர். என். ரவி ஏற்றுக் கொள்ளவில்லை.

மேலும், செந்தில் பாலாஜியை அமைச்சர் பதவியில் இருந்து நீக்குவதாக, முதல்வர் ஸ்டாலினுக்கு ஆளுநர் கடிதம் அனுப்பினார். ஆனால், இந்த விவகாரத்தில் தலையிட்ட மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மத்திய அரசின் சட்டமா அதிபர் ஆர். வெங்கட்ரமணியிடம் இது குறித்து ஆலோசனை நடத்துமாறு ஆளுநரிடம் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

ஜூலை - 10 திங்கட்கிழமை
சோபகிருது வருடம் - ஆனி 25

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 06.00 - 07.30 |
| ராகு காலம் | : | 07.30 - 09.00 |
| திதி | : | அஷ்டமி |



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தில் விட்டு கொடுத்து போவது நல்லது. யாருக்காகவும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். சொந்த பந்தங்களுடன் மனத்தாங்கல் வந்து போகும். சக ஊழியர்களால் பிரச்னை வரும்.

**இடபம்**
குடும்பத்தினரும் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். தாய்வழியில் ஒத்துழைப்பு இருக்கும். புகழ், கௌரவம் கூடும் நாள்

**மிதுனம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். நீண்ட நாட்களாக இருந்த பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். நேர்மறை சிந்தனை பெருகும்.

**சிம்மம்**
உறவினர் நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கன்னி**
பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். மனைவி வழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வாகனத்தை சீர்செய்வீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும்.

**துலாம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். மனதிற்கு இதமான செய்திகள் வரும். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**விருச்சிகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குங்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**
திட்டமிட்ட வேலைகள் தடையின்றி முடியும். தாய் வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். புது வேலை அமையும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

**மகரம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். சொத்துப் பிரச்னைக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். வெற்றி பெறும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள். விலகி சென்ற உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அவசரப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் வந்துபோகும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும்.




# முல்லைத்தீவு அரச அதிபராக உமாமகேஸ்வரன் கடமையேற்பு

முல்லைத்தீவு, ஜூலை 10

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதிய அரச அதிபராக அருளானந்தம் உமாமகேஸ்வரன் நேற்று ஞாயிற்றுக்கிழமை தனது கடமையைப் பொறுப்பேற்றார்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பற்ற வரவேற்பு நிகழ்வில் வட மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐகு, மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். குணபாலன் (காணி), மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் மு. முபாரக், மாவட்ட பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், மாவட்ட பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் லிங்கேஸ்வரன், உலக உணவுத்திட்டத்தின் மாவட்ட அலுவலகரும் மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஜெயபவானி, உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ஐ)

# ஊழல்வாதிகளுக்கு எதிராக 24 மணி நேரத்தில் நடவடிக்கை!

## அதிகாரம் வழங்கினால் செய்வோம் என்கிறார் சரத்



கொழும்பு, ஜூலை 10

**நாட்டில் உள்ள சட்டங்களில் எந்தவித பிரச்னையும் இல்லை. புதிதாக சட்டங்களை கொண்டு வரவேண்டிய தேவையும் கிடையாது. எமக்கு அதிகாரம் வழங்கப்பட்டால் 24 மணித்தியாலங்களுக்குள் நடைமுறையில் உள்ள சட்டங்களை பயன்படுத்தி ஊழல்வாதிகளுக்கு எதிராக சட்டங்களை நடைமுறைப்படுத்துவோம் என எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

மக்கள் புரட்சியை நோக்கி நிராயுதபாணியான கட்சி சார்பற்ற போராட்டம் என்ற தொனிப்பொருளில் கம்பஹா - யக்கல பகுதியில் செயற்திட்ட நிகழ்வு நடைபெற்றது. அதில் கம்பஹா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர், பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பிரதான உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

நல்லாட்சி அரசாங்கத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மகிந்த ராஜபக்ஷவை 'திருடன்' என கூறினார். ரணிலை ராஜபக்ஷ 'திருடன்' என்றார். இந்த திருடர்கள் ஒன்றிணைந்து அரசாங்கத்தில் உள்ளனர். ஊழல் எதிர்ப்பு சட்டம் தொடர்பில் பேசப்படுகிறது. 10 தேங்காய்களை திருடியவர் இரண்டு வருடங்கள் சிறைக்கு செல்ல வேண்டும் என்றால் கோடிக்கணக்கிலும் பில்லியன் கணக்கிலும் திருடியவர்களை குறைந்தது ஒரு வருட காலமேனும் சிறைக்கு அனுப்ப வேண்டும்.

நாட்டில் உள்ள சட்டங்களில் எந்தவித பிரச்சினைகளும் இல்லை. புதிதாக சட்டங்களை கொண்டு வர வேண்டிய தேவை கிடையாது. எமக்கு அதிகாரம் வழங்கப்பட்டால், 24 மணித்தியாலங்களில் நடைமுறையில் உள்ள சட்டங்களை பயன்படுத்தி, ஊழல்வாதிகளுக்கு எதிராக சட்டங்களை நடைமுறைப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)

# கடல்சீற்றத்தால் கரைதட்டிய கப்பலை மீட்கும் பணி தாமதம்

மன்னார், ஜூலை 10

தலைமன்னார் அருகே கரை தட்டி நிற்கும் கப்பலை மீட்கும் பணிகள் கடல்சீற்றத்தால் தாமதமாகின்றன என்று அறிய வருகின்றது.

தூத்துக்குடியிலிருந்து மாலைதீவுக்கு சரக்குகளை ஏற்றிக் கொண்டு 87 மீற்றர் நீளமுள்ள 'அதுல்யா' என்ற மிதவைக் கப்பலும் அதனுடன் இணைந்த 'அவாத்' என்ற இழுவைக் கப்பலும் சென்றன.

அங்கு சரக்குகளை இறக்கி விட்டு மீண்டும் தூத்துக்குடி நோக்கி 2 கப்பல்களும் வந்து கொண்டிருந்தன. இந்தியப் பெருங்கடலை தாண்டி வந்து கொண்டிருந்தபோது 'அவாத்' இழுவைக் கப்பலில் திடீரென இயந்திரக் கோளாறு ஏற்பட்டது. அதே நேரம் கடல் சீற்றம் மற்றும் பலத்த காற்றும் வீசியது இதையடுத்து இலங்கையின் மன்னார் பகுதியை நோக்கி 2 கப்பல்களும் நகர்ந்து சென்றன.



இது தொடர்பாக கப்பலில் இருந்த மாலுமிகள் கடந்த 6ஆம் திகதி சென்னை மற்றும் கொழும்புவில் உள்ள கடல்சார் மீட்பு மையத்துக்கு தகவல் தெரிவித்தனர். இந்நிலையில் கடந்த 7ஆம் திகதி தலைமன்னாருக்கு தெற்கே நடுக்குடா கடற்கரைப் பகுதியில் 2 கப்பல்களும் தரை தட்டி நின்றன.

இந்த கப்பல்களில் 4 இந்திய மாலுமிகள் 5 இந்தோனேசிய மாலுமிகள் என மொத்தம் 9 மாலுமிகள் உள்ளனர். இயந்திரக் கோளாறு ஏற்பட்டு உள்ள அவாத் இழுவை கப்பலை சரி செய்வதற்கான நடவடிக்கைகளை இலங்கையில் உள்ள கடல்சார் மீட்பு மையம் அந்நாட்டு கடற்படையினர் மூலம் மேற்கொண்டு வருகிறது.

மேலும் தரைதட்டி நிற்கும் கப்பல்களை மீட்க இந்தியாவிலிருந்து மீட்பு கப்பல் ஒன்று தலைமன்னாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மன்னார் வளைகுடா கடல் பகுதியில் தற்போது கடல் சீற்றமும் பலத்த காற்றும் நீடித்து வருகிறது. இதனால் கப்பலின் இயந்திரத்தில் பழுது நீக்கும் பணியும் மீட்பு பணிகளும் தாமதமடைந்து வருவதாக கூறப்படுகிறது. (ஐ)

# கல்வி நிறுவக பணிப்பாளராக பேராசிரியர் பிரசாத் நியமனம்

கொழும்பு, ஜூலை 10

தேசிய கல்வி நிறுவகத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக பேராசிரியர் பிரசாத் சேதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இந்த நியமனத்தை வழங்கினார்.

பேராசிரியர் பிரசாத் சேதுங்க ஜப்பானில் உள்ள சுகுபா பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதி பட்டத்தைப் பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்விப் பீடத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார்.

இலங்கையில் ஆசிரியர் கல்வி, ஆசிரியர் தொழில் மேம்பாடு, ஊடாடும் கல்வி, பள்ளி அடிப்படையிலான ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட கல்வித் துறையில் பல ஆராய்ச்சி அனுபவங்களைக் கொண்டவராவார். (ஐ)

# 15 இந்திய மீனவர் நெடுந்தீவு கடலில் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 10

இலங்கை கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட 15 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்புக்குள் நேற்று அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இராமேஸ்வரத்தை சேர்ந்த இரு படகுகளில் வந்த மீனவர்களே கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 15 தமிழக மீனவர்களும் அவர்கள் பயணித்த இரு படகுகளும் தற்போது காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு வரப்பட்டு கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# டொலருக்கு அடிமையானவர்களே ராஜபக்ஷர்களை எதிர்க்கின்றனர்




## சாகல காரியவசம் எம். பி.

கொழும்பு, ஜூலை 10

டொலருக்கு அடிமையான வர்களே ராஜபக்ஷர்களுக்கு எதிராக திட்டமிட்ட வகையில் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளார்கள். இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவே ஆட்சியதிகாரத்தை கைப்பற்றும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஹிங்குராகொடை பகுதியில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு சேவையாற்றினார்களே தவிர நாட்டுக்கு தீ வைக்கவில்லை. பொதுஜன பெரமுன தலைமையிலான எமது அரசாங்கத்தில் அமைச்சரவையில் இருந்தவர்கள் பொருளாதாரப் பாதிப்பை அரசியல் நெருக்கடியாக மாற்றியமைத்தார்கள்.

ஜனநாயக போராட்டம் என்று குறிப்பிட்டுக்கொண்டு கடந்த ஆண்டு பயங்கரவாத செயல்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்பட்டன. டொலருக்கு அடிமையானவர்கள் ராஜபக்ஷர்களுக்கு எதிராக திட்டமிட்ட வகையில் பிரசாரங்களை முன்னெடுக்கிறார்கள்.

ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவையை பெரும்பாலான மக்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, போலியான பிரசாரங்களுக்கு மக்கள் இனி ஏமாற்றமடைய மாட்டார்கள். கட்சி என்ற ரீதியில் மறுசீரமைப்புடன் பலமடைந்துள்ளோம்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவவே ஆட்சியமைக்கும். பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே நாங்கள் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம். எக்காரணிகளுக்காகவும் எமது கட்சி கொள்கையை விட்டுக் கொடுக்க மாட்டோம் - என்றார்.

ஈழநாடு



# டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் அடுத்த இரு வாரங்கள் முக்கியம்!

கொழும்பு, ஜூலை 10

**கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் டெங்கு நோய்க்கு எதிரான போராட்டத்தில் அடுத்த இரண்டு வாரங்கள் முக்கியமானதாக இருக்கும் என்று கொழும்பு மாநகர சபையின் பிரதான சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் ருவான் விஜயமுனி தெரிவித்துள்ளார்.**

மாநகரசபை எல்லைக்குள் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

பருவமழை தொடங்குவதால் டெங்கு பாதிப்பு மேலும் அதிகரிக்கலாம்.

டெங்கு பரவுவதை ஓரளவு கட்டுப்படுத்த முடிந்தாலும், மழைவீழ்ச்சி அதிகரிப்பு காரணமாக, அடுத்த இரண்டு வாரங்கள் முக்கியமானதாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

டெங்கு தடுப்பு வேலைத் திட்டங்களின் போது, தனியார் சொத்துக்கள் மாத்திரமன்றி, பொது இடங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களிலும் கவனம் செலுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த வருடத்தில், கொழும்பு மாநகர எல்லையில் மொத்தமாக 2ஆயிரத்து 138 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதோடு, பெரும்பான்மையானவர்கள் கறுவாத்தோட்டம் பகுதியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

# தமிழ்நாடு ட்றோலர் படகுகளால் அழிக்கப்படுகிறது வடக்கு கடல்

## முதலமைச்சருக்கு எடுத்துரைக்க முடிவு

கொழும்பு, ஜூலை 10

தமிழ்நாடு மீன்பிடி ட்றோலர்களால் வடபகுதி கடல்வளம் அழிக்கப்படுவது தொடர்பில் தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு எடுத்துச் சொல்லப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வடபகுதி பாராளுமன்ற உறுப்பினர்களை தமிழகம் அழைத்துச் செல்லப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடபகுதி கடலில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் தமிழ்நாடு மீன்பிடி ட்றோலர்கள் ஒரு தடவையில் சராசரியாக 18 கிலோ மீனை பிடித்துச் செல்கின்றன.

தமிழ்நாடு மீன்பிடி ட்றோலர்கள் வழித்துத் துடைத்து மீனை அள்ளிச்செல்வதால் வடபகுதி மீனவர்களின் இழப்பு அளவிட முடியாதது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# மலையகத்துக்கான பல்கலை. விரைவில்!

## கல்வி அமைச்சர் சுசில் அறிவிப்பு

நுவரெலியா, ஜூலை 10

மலையகத்துக்கான தனிப் பல்கலைக்கழகம் விரைவில் அமைக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொட்டகலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மலையகத்துக்கான பல்கலைக்கழகத்தின் அவசியத்துவம் பற்றி பலரும் வலியுறுத்தி வந்தனர். இந்த விடயத்தில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் துரிதமாக செயல்பட்டார். ஜனாதிபதியுடன் பேசி அனுமதி பெற்று எனக்கும் அறிவித்தார். நிதியை திரட்டுவதற்கான வேலைத்திட்டத்தை அமைச்சர் ஜீவன் தயாரித்துள்ளார். அரச நிதியை பயன்படுத்துவதற்கு முன்னர் அதனை பெற முடியும். நிதி வழிமுறைகள் தொடர்பான அறிவிப்பை அமைச்சர் வெளியிடுவார்.

பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கு கொட்டகலை ஆசிரியர் கலாசாலை வளாகம் சிறந்த இடம். சூழவுள்ள பகுதியும் அரச காணியாகும். எனவே, எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைக்கு காணி பெறுவதிலும் சிக்கல் இருக்காது, முதலில் பல்கலைக்கழகத்தை நிறுவிவிட்டு, பின்னர் பீடங்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ளலாம்.

நுவரெலியாவில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகும் மாணவர்கள் ஏனைய பகுதிகளுக்கே செல்கின்றனர். இங்கு பல்கலைக்கழகம் அமைந்தால் அதன்மூலம் அவர்கள் பயன்பெறுவார்கள். இன்று நான் கண்காணிப்பு பயணமொன்றை மேற்கொண்டேன். இது தொடர்பில் கொழும்பில் கலந்துரையாடி இறுதி முடிவெடுக்கப்படும் என கல்வி அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

# போலி சாரதி அனுமதிப் பத்திரம் தயாரித்த இருவர் யாழில் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 10

வெளிநாடு செல்வோருக்குப் போலியான சாரதி அனுமதி பத்திரம் தயாரித்து கொடுத்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நபர் ஒருவர் வைத்திருந்த சாரதி அனுமதிப் பத்திரம் போலியானது எனப் பொலிஸாரால் கண்டறியப்பட்டு அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினர் விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில், “சமூக வலைத்தளம் ஒன்றின் ஊடாகவே போலி சாரதி அனுமதி பத்திரம் வழங்கியவர்களின் தொடர்பு தனக்கு ஏற்பட்டதாகவும், அவர்கள் சாரதி அனுமதி பத்திரத்தைப் பெறுவதற்கு 50 ஆயிரம் ரூபாய் அறவிட்டார்கள் எனவும், தனது வீட்டுக்கு வாகனம் ஒன்றில் வந்து கைரேகைகளையும், பிற ஆவணங்களையும் பெற்றுச் சென்றனர்” எனவும் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இருவரைக் கைது செய்தனர். அவர்களிடமிருந்து போலி சாரதி அனுமதி பத்திரங்களைப் பெற்றவர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிய வருகின்றது. (ஐ)

# அனுமதியின்றி வேலைத்திட்டம் அறிக்கை கோருகிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூலை 10

உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதியின்றி நகர அபிவிருத்தி அதிகார சபை ஆரம்பித்துள்ள வேலைதிட்டங்கள் தொடர்பில் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவுறுத்தியுள்ளார்.

இந்த அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அனுமதியின்றி வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதால் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்தநிலையில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார். (ஐ)

# எயிட்ஸால் பாதிக்கப்பட்டோருக்கு கொழும்பில் விசேட மருத்துவமனை

கொழும்பு, ஜூலை 10

எச். ஐ. வி அபாயத்தைக் குறைப்பதற்கான இலவச மருந்துகளை வழங்கும் விசேட மருத்துவமனை மாதத்தின் ஒவ்வொரு இரண்டாவது வாரமும் ஞாயிற்றுக்கிழமையன்று கொழும்பு செரெம் பிளேஸில் அமைந்துள்ள எஸ். டி. டி . மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு பிரிவால் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ள நபர்களின் தனியுரிமை அதிகபட்சமாக பாதுகாக்கப்படுவதோடு அவர்களின் அடையாளம் வெளிப்படுத்தப்படாது என்று பால்வினை நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்புக்கான தேசிய வேலைத் திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஜானகி விதான பத்திரண தெரிவித்தார். (ஐ)

# ஓய்வுபெறும் ஊழியர்களுக்கு பணிக்கொடை வழங்குவதில் சிக்கல்

கொழும்பு, ஜூலை 10

பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஆயிரத்து 100 ஊழியர்கள் விருப்பத்தின் அடிப்படையில் ஓய்வு பெறவுள்ளனர் என்று அதன் தலைவர் சட்டத்தரணி ரத்னசிறி கළුபஹன தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கான பணிக்கொடை வழங்குவதற்கு 266 கோடி ரூபாய் தேவையாகவுள்ளது. சுய விருப்பத்தின் அடிப்படையில் ஓய்வுபெறும் ஊழியர்களுக்கான பணிக்கொடையை பெற்றுக்கொடுப்பதற்கு அவசியமான நிதியை திரட்டுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஜூன் மாத சம்பளத்தின் நிலுவை தொகையை வழங்கக் கோரி பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நிதி நெருக்கடி காரணமாக ஊழியர்களுக்கு முழு சம்பளத்தையும் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அதன் தலைவர் சட்டத்தரணி ரத்னசிறி களுபஹன தெரிவித்துள்ளார்.

எனினும், எதிர்வரும் திங்கட்கிழமை முழு சம்பளம் வழங்கப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சட்டவிரோதமாக இறைச்சி கொண்டு சென்ற இருவர் கைது

கொழும்பு, ஜூலை 10

80 இலட்சம் ரூபாய் பெறுமதியான மாடு, ஆட்டு இறைச்சியை குளிரூட்டப்பட்ட லொறியில் கலன்பிந்துனவவில் இருந்து நுகேகொடை கொண்டுசெல்லும்போது அவை கைப்பற்றப்பட்டன என்று அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அம்பன்பொல மற்றும் மாளிகாவத்தை பகுதிகளைச் சேர்ந்த 56 மற்றும் 57 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுமதி வழங்கப்படாத நிலையில் லொறியில் இறைச்சி கொண்டு செல்லப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், குறித்த லொறியை நிறுத்தி சோதனையிட்டனர்.

இந்நிலையில், சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு தயாரானபோது, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு சந்தேக நபர்கள் மூன்று இலட்சம் ரூபாயை லஞ்சமாக வழங்க முயன்றனர் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

# வருமானம் குறைந்தோருக்கு ஆடுகள் வழங்கல் ஆரம்பம்!

கொழும்பு, ஜூலை 10

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் விவசாய அமைச்சு ஆடுகளை வழங்கும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

ஐந்து வருடங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 70 ஆடுகள் வழங்கப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர அம்பாந்தோட்டையில் இந்த வேலைத் திட்டத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

அம்பாந்தோட்டையில் நிறுவப்பட்டுள்ள 7 விவசாய தொழில்முனைவோர் கிராமங்களுக்கு ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் 10 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஆடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டது. (ஐ)

# காலம் முடிந்த உள்ளூராட்சிகளுக்கு மீண்டும் அதிகாரம் வழங்க முடியாது

## நீதிமன்றை நாட சுதந்திரக கட்சி முடிவு

கொழும்பு, ஜூலை 10

**பதவிக் காலம் நிறைவடைந்துள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு மீண்டும் அதிகாரத்தை வழங்கி பழைய தலைவர்களையும் உறுப்பினர்களையும் நியமிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. பெரமுனவின் தோல்வியை மறைப்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ள இந்த பிரேரணைக்கு எதிராக நீதிமன்றத்தை நாடவுள்ளதாக சிறீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

பிரதேச சபை, மாநகர சபை மற்றும் நகர சபை தொடர்பில் தனிநபர் பிரேரணையை பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொடவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்தப் பிரேரணைக்கு எதிராக வழக்கு தொடர எதிர்பார்த்துள்ளோம். தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்துக்கு அப்பால் உள்ளூராட்சி மன்றங்களின் பதவி காலத்தை நீடிக்க முடியாது என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உரிய காரணங்களை முன்வைத்து விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரால் இரண்டு ஆண்டுகளுக்கு உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை பாராளுமன்றத்தின் அனுமதியுடன் நீடிக்க முடியும். அவ்வாறில்லை எனில் அவசரகால நிலைமையில் ஜனாதிபதியால் பதவி காலத்தை நீடிக்க முடியும். ஆனால், நாட்டில் தற்போது அவசரகால நிலைமை இல்லை என்பதால் ஜனாதிபதிக்கு எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்ல முடியாது.

அரசாங்கத்தின் இவ்வாறான செயல்பாடுகளால் சகல கட்சிகளையும் சேர்ந்தவர்கள் மீண்டும் உள்ளூராட்சி சபைகள் ஸ்தாபிக்கப்படுவதால் தமக்கும் நன்மை என எண்ணக்கூடும். உண்மையில் அவ்வாறு செய்வதற்கு எந்தவொரு சட்ட ஏற்பாடுகளும் இல்லை. கிராம மட்டத்திலிருந்து பொதுஜன பெரமுன வாக்குகளை இழந்துள்ளதால், அக்கட்சியின் தோல்வியை மறைப்பதற்காகவே இவ்வாறானதொரு பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது- என்றார். (ஐ)



# பாதுகாக்கப்பட்ட வனத்தில் தீ; 100 ஏக்கருக்கும் மேல் அழிவு!

கொழும்பு, ஜூலை 10

மொனாரகலை - வெல்லவாய - பிபிலஹெல பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் பரவிய தீயால் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் காடுகள் அழிவடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இந்தத் தீ பரவல் தொடங்கியதாகக் கூறப்படுகின்றது.

இந்த தீ பரவலால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

கடும் வறட்சியான காலநிலை மற்றும் காற்றுடன் கூடிய காலநிலை காரணமாகவே தீ வேகமாக பரவியது.

நேற்று மதியம் வரை தீயை கட்டுப்படுத்த முடியவில்லை. தீயணைப்பு படையினரும் மக்களும் அந்தப் பகுதியில் தீயை அணைக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். (ஐ)

# கார் பள்ளத்தில் வீழ்ந்ததில் சிறுவர்கள் உட்பட ஐவர் காயம்!

கொழும்பு, ஜூலை 10

கார் வீதியை விட்டுவிலகி பள்ளத்தில் வீழ்ந்ததில் இரண்டு சிறுவர்கள் உட்பட 5 பேர் காயமடைந்துள்ளனர்.

ஹெம்மாத்தகம - அம்புலுவாவ 3 ஆம் கட்டை பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் ஹெம்மாத்தகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கம்பளை உலப்பனை பிரதேசத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த குழுவினரே இவ்வாறு விபத்துக்குள்ளாகினர். காயமடைந்தவர்களின் நிலை கவலைக்கிடமானதாக இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விபத்து குறித்து ஹெம்மாத்தகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# வர்த்தகப் பொருட்களுக்கு வரி தடுப்பதற்கு புதிய சட்டமூலம்!

கொழும்பு, ஜூலை 10

பாராளுமன்றத்தின் அனுமதியின்றி விசேட வர்த்தக பொருட்களுக்கு வரி விதிக்கப்படுவதை தடுக்கும் வகையில் புதிய சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட சட்டமூலமாக பாராளுமன்ற உறுப்பினர் இரான் விக்ரமரத்னவால் இந்த சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இது வர்த்தமானி மூலமும் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த புதிய சட்டமூலத்தின் ஊடாக விசேட வர்த்தக பொருட்களுக்கு வரி விதிப்பது தொடர்பான புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் இரான் விக்ரமரத்ன குறிப்பிட்டுள்ளார்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு சாரதி அனுமதிப் பத்திரம்!

## புதிய முறைமை தயாரிப்பு

கொழும்பு, ஜூலை 10

மாற்றுத்திறனாளிகளுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான புதிய முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்காக, மோட்டார் போக்குவரத்து துறை உதவி ஆய்வாளர், தலைமை மோட்டார் போக்குவரத்து ஆய்வாளர், மருத்துவர்கள் ஆகியோர் கொண்ட குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

ஓட்டுநர் உரிமத்துக்கு விண்ணப்பிக்கும் மாற்றுத்திறனாளி நபர், அவர் விண்ணப்பித்த வாகனத்தை ஓட்டுவதற்கு சரியான உடல் தகுதி உள்ளவரா என்பதை இந்தக் குழு முதற்கட்ட பரிசோதனையை மேற்கொள்ளும். வாகனத்தின் உதிரி பாகங்களைப் பயன்படுத்துவதற்கு தற்போதுள்ள உடற்குறைபாடு தடையாக உள்ளதா என்பது குறித்து நடைமுறைச் சோதனை நடத்தப்படும்.

அவ்வாறான தடை இல்லை என நிபுணர் குழு சிபாரிசு செய்தால், குறித்த நபர் சாரதி அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் சாதாரண முறையின் கீழ் எழுத்து மற்றும் நடைமுறைப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு வாய்ப்பு கிடைக்கும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மோட்டார் போக்குவரத்து துறை புதிய சுற்றறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. (ஐ)

# செல்வந்தர்களுக்கு நிவாரணம் அளிக்க உழைப்போரின் நிதியில் கையளிப்பு!

கொழும்பு, ஜூலை 10

தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் பிரதான நிலை செல்வந்தர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப நிதியத்தில் கை வைக்கப்பட்டுள்ளது. பொருளாதார மீட்சிக்கு சிறந்த திட்டங்கள் ஏதும் நடைமுறை செய்யப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மஹரக பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு,

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தற்போது அவதானம் செலுத்தப்படுகிறது. நாட்டின் கடன் நிலை மறுசீரமைக்கப்பட வேண்டும். கடன் நிலை நிலைபேறான தன்மையில் இல்லை என்பதை 2016 ஆம் ஆண்டு அமைச்சரவைக்கு அறிவித்தேன். இருப்பினும், கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அப்போது அவதானம் செலுத்தப்படவில்லை.

2019ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷர்களின் தூரநோக்கமற்ற பொருளாதார முகாமைத்துவ பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்தது என்பது அனைவரும் அறிந்த உண்மை. பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷர்கள் நிச்சயம் பொறுப்புக்கூற வேண்டும்.

2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்த எமது அரசாங்கம் அதிக வட்டி வீதத்துக்கு சர்வதேச பிணைமுறியாளர்களிட மிருந்துக் பெற்றுக் கொண்ட அரசமுறை கடன்கள் பொருளாதார பாதிப்பை தீவிரப்படுத்தியது. இருப்பினும் வங்குரோத்து நிலைக்கு தள்ளவில்லை.

கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் தேசிய கடன் மறுசீரமைப்பை தவிர்க்க முடியாது. தேசிய கடன்களை மறுசீரமைக்க அரசாங்கம் எடுத்த திட்டங்கள் தவறானதாக உள்ளது. 2027 ஆம் ஆண்டு முதல் 2032 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மத்திய வங்கி விநியோகித்துள்ள திறைசேரி உண்டியல்களை பிணமுறிகளாக மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திறைசேரி உண்டியல்களை பிணைமுறிகளாக மாற்றியமைக்கும் போது மத்திய வங்கி ரூபாய் பெறுமதி அலகு நெருக்கடியை எதிர்கொள்ளும். இந்த நிலையை முகாமைத்துவம் செய்ய ஒன்று நேரடி வரி அறவீட்டை அதிகரிக்க வேண்டும் அல்லது நாணயம் அச்சிட வேண்டும்.



இந்த இரு தீர்மானங்களையும் அல்லது ஒன்றையேனும் நடைமுறைப்படுத்தினால் மக்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, திறைசேரி உண்டியல்களை பிணைமுறிகளாக மாற்றியமைக்கும் தீர்மானத்தை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் பிரதான நிலை செல்வந்தர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப நிதியத்தில் கை வைக்கப்பட்டுள்ளது. பொருளாதார மீட்சிக்கு சிறந்த திட்டங்கள் ஏதும் நடைமுறையாகவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய பரிந்துரைகளை அரசாங்கம் எதிர்வரும் செப்ரெம்பருக்குள் நிறைவுபடுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# இளைஞரின் தாக்குதலில் தந்தை பலி; மகள் காயம்!

கொழும்பு, ஜூலை 10

பெண் ஒருவரை காயப்படுத்தியதுடன் அவரின் தந்தையை கொலை செய்தார் என்று கூறப்படும் இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவிசாவளை - பதுவத்த பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய ஒருவரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்கான யுவதியும் அவரின் தந்தையும் அவிசாவளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் தந்தை உயிரிழந்தார். மகள் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தநிலையில், சம்பவம் தொடர்பில் 25 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# ஆபத்தான கிளஸ்டர் வெடிகுண்டுகளை உக்ரேனுக்கு வழங்கும் அமெரிக்கா!

மிக ஆபத்தான 'கிளஸ்டர் வெடிகுண்டுகள்' என்று அழைக்கப்படும் கொத்து குண்டுகளை உக்ரேனுக்கு அமெரிக்கா வழங்கவுள்ளது.

கடந்த வெள்ளியன்று செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன், கொத்துக் குண்டுகளின் ஆபத்து காரணமாகவே உக்ரேன் நாட்டுக்கு அவற்றை அளிப்பதை இத்தனை மாதங்களாக தாமதப்படுத்தியதாக தெரிவித்தார்.

"இருப்பினும் உக்ரேன் நாட்டில் ஆயுத பற்றாக்குறை நிலவ அமெரிக்கா ஒருபோதும் விரும்பாது." என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், உக்ரேனுக்கு அனுப்பப்படும் அமெரிக்க கொத்து குண்டுகள் ரஷ்யாவால் ஏற்கனவே உக்ரேன் மீதான போரில் பயன்படுத்தப்பட்ட குண்டுகளை விட மிகவும் பாதுகாப்பானவை என்றார்.

இதற்கிடையே, அமெரிக்காவின் இந்த முடிவு "சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட முடிவு" என உக்ரேன் அதிபர் ஜெலன்ஸ்கி பாராட்டியுள்ளார். ஆனால் அமெரிக்காவுக்கான ரஷ்ய தூதர், இது அமெரிக்காவின் மோசமான நிலையைக் காட்டுவதாக கடுமையாக சாடியுள்ளார்.


கொத்து குண்டுகள் 120க்கும் மேற்பட்ட நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளன.

அடுத்த வாரம் லிதுவேனியாவில் நடைபெறவுள்ள நேட்டோ உச்சி மாநாட்டிற்கு முன்னதாக எடுக்கப்பட்டுள்ள இந்த முடிவைப் பற்றி நட்பு நாடுகளுடன் கலந்தாலோசித்ததாக கடந்த வெள்ளிக்கிழமை சிஎன்என் ஊடகத்துக்கு அளித்த பேட்டியில் ஜோ பைடன் தெரிவித்திருந்தார்.

**கொத்துக் குண்டுகள் என்றால் என்ன?**

கொத்துக் குண்டுகள் என்பவை ராக்கெட், ஏவுகணை அல்லது பீரங்கி போன்ற உபகரணங்களில் இருந்து அதிக எண்ணிக்கையிலான சிறிய குண்டுகளை சிதறடிக்கும் ஒரு தாக்குதல் முறையாகும். இந்த தாக்குதலில் ஒரு பெரிய குண்டின் உள்ளே பல சிறிய குண்டுகளை வைத்து ராக்கெட், ஏவுகணை, பீரங்கி அல்லது விமானத்தில் இருந்து குண்டு வீசப்படுகிறது.

இலக்கை நோக்கி ஒரு குண்டுதான் எறியப்படும் என்றாலும், அந்தப் பெரிய குண்டு வெடித்தபின், அதிலிருந்து வெளியாகும் பல சிறிய குண்டுகள் தாக்குதலுக்கு உள்ளாகும் ஒரே இலக்கின் பரந்த பகுதியைத் தாக்கும் தன்மை உடையவை.







இந்த பெரிய குண்டில் இருந்து வெளியேறும் சிறிய குண்டுகள் வெடிக்கும் தன்மை உடையவை என்றாலும், ஈரமான அல்லது மென்மையான நிலத்தை அடைந்தால் அவை வெடிக்காது. இதனால் தாக்குதல் நடக்கும் போதும் இந்த குண்டுகள் ஆபத்தானவை, தாக்குதலுக்குப் பின் வெடிக்காமல் இருக்கும் குண்டுகளும் ஆபத்தானவையாக இருக்கின்றன. இவற்றை வானில் இருந்து இலக்கை நோக்கி வீசவும் முடியும். தரையில் இருந்து மற்றொரு இலக்கை நோக்கி தாக்குவதற்கும் பயன்படுத்த முடியும்.

தரையை அடைந்த பின்னரும் வெடிக்காமல் இருக்கும் குண்டுகள் 'டட்ஸ்' என அழைக்கப்படுகின்றன. இந்த வெடிக்காத குண்டுகள், பின்னர் ஏதோ ஒரு நேரத்தில் வெடித்து, அப்பகுதியில் இருக்கும் பொதுமக்களுக்கு உயிரிழப்பை ஏற்படுத்தலாம், அல்லது பலத்த காயங்களை ஏற்படுத்தலாம்.

ராணுவக் கண்ணோட்டத்தில் பார்த்தால், அகழிகள் மற்றும் பதுங்கு குழிகளில் மறைந்திருக்கும் ராணுவத்தினர் மீது இது போன்ற குண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தப்படுகிறது. இத்தாக்குதலில், அந்த பதுங்கு குழிகளைச் சுற்றிலும் வெடிக்காமல் கிடக்கும் குண்டுகளை கவனமாக அகற்றா விட்டால் அங்கிருந்து யாரும் பிற பகுதிகளுக்குச் செல்ல முடியாது. அந்த அளவுக்கு அவை ஆபத்தானவை.

**கிளஸ்டர் குண்டுகள் ஏன் தடை செய்யப்பட்டுள்ளன?**

பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி உட்பட 100இற்கும் மேற்பட்ட நாடுகள், ஒரு சர்வதேச உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளன. இதன்படி, பொது மக்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்துவதன் காரணமாக இந்த வகையான குண்டுகளைப் பயன்படுத்துவதை அல்லது சேமித்து வைப்பதை அந்த உடன்படிக்கை சட்டவிரோதமாக்குகிறது.




கொத்து குண்டுகளின் ஆபத்தில் சிக்கும் பொதுமக்களில் ஏராளமானோர், குறிப்பாக குழந்தைகள் படுகாயமடைந்து வாழ்க்கையில் பெரும் துயரங்களை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். குடியிருப்புக்கள் மற்றும் வேளாண் நிலங்களில் வெடிக்காமல் கிடக்கும் இந்த குண்டுகள் சாதாரண பொம்மையைப் போல் இருப்பதால், பெரும்பாலும் ஆர்வத்தின் காரணமாக அவற்றை அப்பாவி பொதுமக்கள் கைகளில் எடுக்கின்றனர்.

கொத்து குண்டுகள் மூலம் தாக்குதல் நடத்துவது ஒரு "வெறுக்கத்தக்க" செயல் என்று மனித உரிமை அமைப்புக்கள் கூறுகின்றன.

போதுமான பீரங்கி குண்டுகள் இல்லாத நிலையில், அந்த தற்காப்பு அகழிகள் அனைத்தையும் நிர்வகிக்கும் ரஷ்ய காலாட்படையை குறிவைக்க, கொத்துக் குண்டுகளை அளித்து உதவுமாறு அமெ ரிக்காவிடம் உக்ரேன் கேட்டுள்ளது.

ஆனால் இது வாஷிங்டனுக்கு அவ்வளவு எளிதான வேண்டுகோளாக இருக்கவில்லை. மேலும் அமெரிக்காவில் உள்ள பல ஜனநாயகவாதிகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் இதை ஏற்கமாட்டார்கள். எனவே உக்ரேனின் இந்த வேண்டுகோள் குறித்து குறைந்தது ஆறு மாதங்களாக விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.



**கிளஸ்டர் குண்டுகளை உக்ரேனுக்கு அமெரிக்கா வழங்கினால் அதன் விளைவு என்னவாக இருக்கும்?**

இந்தப் போரில் தார்மீக அடிப்படையில் உக்ரேனுக்கு உதவி வரும் அமெரிக்காவை, அந்த இடத்திலிருந்து அகற்றுவதே உடனடி விளைவாக இருக்கும்.

ரஷ்யாவின் போர்க்குற்றங்கள் அனைத்தும் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன, ஆனால் அமெரிக்கா உக்ரேனுக்கு கொத்துக் குண்டுகளை அளித்தால், அமெரிக்கா மீதும் குற்றச்சாட்டுக்கள் எழும். இது ரஷ்யாவுக்கு சாதகமான ஒரு நிலையை அளிக்கும்.

கிளஸ்டர் வெடிமருந்துகள் ஒரு பயங்கரமான, கண்மூடித்தனமான ஆயுதங்களாக இருக்கின்றன. ஒரு நல்ல நோக் கத்திற்காக இந்த வகை குண்டுகள் உலகம் முழுவதும் பெரும்பாலான நாடுகளில் தடைசெய்யப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் தற்போதைய முடிவு காரணமாக, க்ளஸ்டர் குண்டுகளைத் தடை செய்துள்ள மேற்கத்திய நாடுகளுடன் முரண்பாடுகள் ஏற்படும் நிலையும் உருவாகும். இந்த ஒரே காரணத்தினால் அது போல் முரண்கள் ஏற்பட்டு, அந்நாடுகளின் ஒற்றுமைக்கு குந்தகம் ஏற்படுமானால், அது ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினின் விருப்பதை நிறைவேற்றுவதற்கு சமம் என்பதை விட வேறு எதுவும் கூறமுடியாது.

கொத்து குண்டுகளைப் பயன்படுத்தியதாக ரஷ்யா மீது ஏற்கெனவே உலக அளவிலான மனித உரிமை அமைப்புகள் குற்றம் சுமத்திவரும் நிலையில், அந்த குற்றச்சாட்டுக்கள் யுக்ரேன் மற்றும் அமெரிக்கா மீதும் சுமத்தப்படும் நிலை உருவாகும்.

ஈழநாடு



நிலாந்தன்

# சிதறிப்போன மக்கள்?



காற்றுவழிக் கிராமங்களைப் பற்றிய எனது கடந்தவாரக் கட்டுரையானது பெருமளவுக்கு தீவக மக்களால் வரவேற்கப்பட்டிருக்கிறது. எனினும் ஒரு பகுதியினர் அதற்கு வேறுவிதமாக வியாக்கியானம் தருகிறார்கள். கோவில்களில் காசைக் கொட்டுவது என்பது ஒரு விதத்தில் ஊரில் தனது முதன்மையை நிலைநாட்டும் நோக்கத்தையும் கொண்டது என்று அவர்கள் கூறுகிறார்கள். ஒரு காலம் நீருக்கு கஷ்டப்பட்ட கிராமத்தில் இருந்து பொருளாதார மற்றும் போர்க் காரணங்களுக்காக ஊரை விட்டுப்போன மக்கள் இப்பொழுது அதே ஊரில் கற்பனை செய்ய முடியாத ஒரு தொகையைச் செலவழித்து ஒரு கோவிலைப் புனரமைப்பது என்பது, தங்களால் முடியும் என்பதனைச் சாதித்துக்காட்டும் ஒரு நிகழ்வாக ஏன் எடுக்கக் கூடாது என்றும் கேட்கப்படுகிறது.

அதில் உண்மை உண்டு. புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தாங்கள் தேடிய செல்வத்தை எப்படி ஊரில் செலவழிப்பது என்பதை குறித்து பொருத்தமான அபிவிருத்தி திட்டங்கள் இல்லாத வெற்றிடத்தில்தான் கோவில்களில் முதலீடு செய்யும் ஒரு நிலைமை ஏற்படுகின்றது. கோவில்களை புனரமைப்பது என்பது அவர்களுடைய மத நம்பிக்கை சார்ந்த விடயம். ஆனால் ஊரின் பெருமையை வெளி உலகத்திற்கு காட்டுவது என்பது அதுவும் ஊர் என்பது ஊருக்கு வெளியே வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் சிதறிப் போயிருக்கும் ஒரு பின்னணியில், ஊருக்கு வெளியே இருக்கும் ஊரவர்களுக்கு தமது முதன்மையை, பெருமையை நிலைநாட்டுவது என்று பார்க்கும் பொழுது, அங்கே ஊரைக் கட்டி யெழுப்புவதா அல்லது குறிப்பிட்ட கொடையாளி தன்னுடைய பெயரை கட்டியெழுப்புவதா என்ற கேள்விக்கு விடை முக்கியம்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் பழைய மாணவர் சங்கங்களைப் போலவே ஊர்ச் சங்கங்கள் உண்டு. இச்சங்கங்கள் பல ஓரளவுக்கு ஊரைக் கட்டியெழுப்புகின்றன. ஆனால் அதனை ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவது என்ற மையப் புள்ளியில் இருந்து சிந்தித்துச் செய்வதாகத் தெரியவில்லை. ஏனெனில் தமிழ்க் கட்சிகளை போலவே ஊர் சங்கங்களுக்கிடையிலும் ஐக்கியம் இல்லை. ஒரே ஊருக்கு வெவ்வேறு புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் வேறு வேறு சங்கங்கள் உண்டு. அவற்றுக்கு இடையில் ஐக்கியம் இல்லை. புலம் பெயர்ந்த தரப்பில் உள்ள கொடையாளிகள் அல்லது சங்கங்கள் ஊருக்கு தாங்கள் செய்யும் நற்காரியங்களுக்குரிய பாராட்டுக்கள் தங்களுக்கு மட்டுமே கிடைக்க வேண்டும் என்று சிந்திப்பதும் ஒரு காரணம்.அதில் ஓர் ஈகோ உண்டு. ஆனால் அந்த ஈகோவை பொசிட்டிவ்வான விதத்தில் பொருத்தமான அபிவிருத்தி திட்டங்களுக்குள் உள்வாங்கலாம். அதை யார் செய்வது? ஊர்ச் சங்கங்களை ஏதோ ஒரு பொது நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் யார் ஒன்றாக்குவது?

புலம்பெயர்ந்த தமிழர்கள் பெரும்பாலானவர்கள் ஊர் நினைவுகளை ஊறுகாய் போட்டு வைத்திருக்கிறார்கள். ஒரு விதத்தில் ஊர்களையும் ஆங்காங்கே ஊறுகாய் போட்டு வைத்திருக்கிறார்கள். இவ்வாறு தாம் ஊரை விட்டுப்பிரிந்த காலத்தையும், ஊர் பற்றிய தமது நினைவுகளையும் ஊறுகாய் போட்டு வைத்திருக்கும் ஒரு சமூகத்தின் ஊர்ப் பற்று என்பது ஒரு தேச நிர்மாணத்தைப் பொறுத்தவரை அடிப்படையான ஓர் ஆக்க சக்தி. ஆனால் அதை ஒரு தேசத்தை கட்டியெழுப்பும் திரட்டப்பட்ட சக்தியாக மாற்றுவதற்கு தேச நிர்மாணம் என்ற அடிப்படையில் ஒரு பொதுவான வேலைத் திட்டம் இருக்க வேண்டும். ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக அவ்வாறான வேலைத்திட்டங்கள் எவையும் கிடையாது. ஒரு மையத்தில் இருந்து முடிவெடுத்து ஒரு மையத்திலிருந்து காசை திரட்டி அதை ஆக்கபூர்வமான பொருத்தமான வழிகளில் தேச நிர்மானத்தை நோக்கி முதலீடு செய்வதற்கு தமிழ்மக்கள் மத்தியில் இப்பொழுது ஒன்றிணைந்த மையங்கள் கிடையாது. மாறாக சிதறிப்போன சிறு மையங்கள்தான் உண்டு. நாட்டில் ஒவ்வொரு கட்சியும் தனது வாக்கு வங்கியை எப்படிக் கட்டியெழுப்பலாம் என்று சிந்திக்கின்றதோ அப்படித்தான். எனவே காற்றுவழிக் கிராமங்களில் கோவில்களைப் புனரமைக்கும் செயற்பாடுகள் நமக்கு எதை உணர்த்துகின்றன வென்றால்,தமிழர்கள் தேவைகளையும் வளங்களையும் பொருத்தமான விதங்களில் இணைக்க முடியாத ஒரு மக்களாக, ஒரு மையத்திலிருந்து திட்டமிட முடியாத மக்களாகக் காணப்படுகிறார்கள் என்பதைத்தான்.

இதனைக் கோவில்களை புனரமைக்கும் விடயத்தில் மட்டுமல்ல, ஐநாவை அணுகுவத் இந்தியாவை அணுகுவத் அமெரிக்காவை அணுகுவத் ஐரோப்பாவை அணுகுவத் உலகப் பொது நிறுவனங்களான பன்னாட்டு நாணய நிதியம், உலகவங்கி போன்றவற்றை அணுகுவதுபோன்ற எல்லா விடயங்களிலுமே தொகுத்துக் காணலாம். தமிழ் மக்கள் ஒரு மையம் இல்லாத மக்களாகவும் மையத்தில் இருந்து முடிவெடுக்காத மக்களாகவும் காணப்படுகிறார்கள். இதற்கு ஆகப்பிந்திய அண்மைய உதாரணங்களை இங்கே சுட்டிக்காட்டலாம்.

முதலாவதாக, உலகத்தமிழர் பேரவை என்று புலம்பெயர்ந்த தமிழர் அமைப்பு அண்மையில் அமெரிக்கப் பிரதானிகளைச் சந்தித்தது. அச்சந்திப்பில் கலந்து கொண்ட அமெரிக்கப் பிரதானிகளை வைத்து பார்த்தால், அது ஒரு பெறுமதியான சந்திப்பு. ஜெனிவாக் கூட்டத் தொடரை முன்னிட்டு நடந்த அச் சந்திப்பானது புலம்பெயர்ந்த தமிழர்களை அமெரிக்கா ஏதோ ஒரு நோக்கத்தோடு கையாள விரும்புகிறது என்ற செய்தியை துலக்கமான விதங்களில் வெளிப்படுத்தியது.

இரண்டாவது, பாரதிய ஜனதாக்கட்சியின் தமிழக அமைப்பாளர் அண்ணாமலையை லண்டனுக்கு அழைத்தமை. பிரித்தானியத் தமிழர் பேரவை அந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. அதனை அவர்கள் உறவுப் பாலம் என்று அழைத்தார்கள். அது தொடர்பில் முக்கியமாக இரண்டு விமர்சனங்கள் எழுந்தன. ஒன்று பாரதிய ஜனதாவின் இந்துத்துவா நிலைப்பாட்டை மேற்படி புலம்பெயர்ந்த தமிழர் அமைப்பும் ஏற்றுக் கொள்கிறதா என்பது. இரண்டாவது பாரதிய ஜனதா பிரமுகர்கள் இப்பொழுதும் 13ஆவது திருத்தத்தைத்தான் ஒரு தீர்வாக முன்வைக்கிறார்கள் என்பது. அதாவது பாரதிய ஜனதாவை நெருங்கி செல்வதன்மூலம், ஈழத் தமிழர்கள் தொடர்பான இந்தியாவின் வெளியுறவு நிலைப்பாட்டில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியவில்லை என்பது. குறிப்பாக, பாரதிய ஜனதாவை இந்துத்துவா என்ற கொழுக்கி மூலம் கவர முயற்சிப்பதன் விளைவாக தாயகத்தில் எத்தனை இந்துக் கோவில்களைக் காப்பாற்ற முடிந்திருக்கிறது? அல்லது அடாத்தாகக் கட்டப்படும் எத்தனை விகாரைகளை அகற்ற முடிந்திருக்கிறது?என்றெல்லாம் அவர்கள் கேட்கிகிறார்கள்.

மூன்றாவது, ஐரோப்பாவை மையமாகக் கொண்டியங்கும் உலகத் தமிழர் இயக்கம் என்று ஓர் அமைப்பு தொடர்ச்சியாக ஐநா விவகாரங்களில் ஈழத் தமிழர்கள் சார்பாக செயற்பட்டு வருகின்றது. கடந்த பல ஆண்டுகளைத் தொகுத்து பார்த்தால் ஐநாவில் ஈழத்தமிழர்களை அந்த அமைப்புத்தான் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதா என்ற ஒரு தோற்றம் உண்டாகக்கூடும். அந்த அமைப்பின் யூடியூப்பில் காணக்கிடைக்கும் காணொளிகளிலும் அதை உணரக் கூடியதாக உள்ளது.

நாலாவது, லண்டனை மையமாகக் கொண்ட மூன்று அரசியல் செயற்பாட்டாளர்கள் இந்தியாவைக் கையாள்வது என்று ஒரு நிகழ்ச்சி திட்டத்தை முன்வைத்து தொடர்ச்சியாக இந்தியாவில் கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தி வருகிறார்கள். இதுவரையிலும் மூன்று கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. இக்கருத்தரங்குகளில் தாயகத்திலிருந்து ஜனநாயகப் போராளிகள் கட்சியின் முக்கியஸ்தர்கள் பங்குபற்றி வருகிறார்கள். இந்த அமைப்பும் பாரதிய ஜனதாவை நெருங்கிச் செல்வதன் மூலம் ஈழத் தமிழர்கள் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டில் எவ்வாறு மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்று சிந்திப்பதாக தெரிகிறது.

இப்பொழுது மேற்சொன்ன அனைத்தையும் தொகுத்துப் பார்க்கலாம். இந்தியாவை அணுகுவது; அமெரிக்காவை அணுகுவது; ஐரோப்பாவை அனுப்புவத் ஐநாவைக் கையாள்வது போன்ற அனைத்துமே வெளியுறவுச் செயற்பாடுகள்தான். அதாவது ஒரு வெளிவகாரக் கொள்கையை முன்வைத்து அதற்குரிய கட்டமைப்புகளை உருவாக்கி அதன்மூலம் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள். வெளிவிவகாரம் எனப்படுவது ஒரு சக்தி மூலம் (Power source) ஏனைய சக்தி மூலங்களோடு இடையூடாடுவது. ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் அப்படிப்பட்ட சக்தி மூலங்கள் கிடையாது. தாயகத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட கட்சிகள் உண்டு. மெய்யான சக்தி மூலங்கள் அவைதான்.ஆனால் அக்கட்சிகளிடம் வெளியுறவுக் கட்டமைப்பு எதுவும் கிடையாது. அவ்வாறு தாயகத்திலிருந்து பொருத்தமான வெளியுறவு செயற்பாடுகளை முன்னெடுக்க தேவையான வெளியுறவு தரிசனங்களோ கட்டமைப்புகளோ இல்லாத வெற்றிடத்தில் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் அல்லது தனிநபர்கள் அதை முன்னெடுத்து வருகிறார்கள். அவர்களுக்கிடையிலும் ஒன்றிணைப்பு இல்லை. அவர்கள் ஒரு வலு மையமாக இல்லை.

இது ஒரு தலைகீழ்நிலை. அதாவது வெளியுறவுச் செயற்பாடுகளை யார் முன்னெடுக்க வேண்டுமோ அவர்கள் அதைச் செய்யவில்லை. அதற்குரிய கட்டமைப்புகளும் அவர்களிடம் இல்லை. ஆனால் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் போதிய செல்வம் உண்டு; மொழியறிவு உண்டு; தொடர்புகளும் உண்டு. அதைவிட முக்கியமாக, அவ்வாறான வெளியுறவுச் செயற்பாடுகளை வெளிப்படையாக முன்னெடுக்க தேவையான சுதந்திரமான வெளியும் அங்கே உண்டு.எனவே தாயகத்தில் செய்யாமல் விடப்பட்டதை அவர்கள் செய்ய முயற்சிக்கிறார்கள்.

இதில் மேலும் ஒருதாரணத்தை இங்கே சுட்டிக்காட்டலாம்.கனடாவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை தொடர்பான தீர்மானம் எனப்படுவது ஒரு தனிநபர் பிரேரணைதான்.அத்தனிநபர் பிரேரணையை முன்மொழிந்த நாடாளுமன்ற உறுப்பினரின் பின்னணியில் சில விரல்விட்டு எண்ணக்கூடிய கனேடியத் தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் காணப்படுகிறார்கள்.நன்கு திட்டமிட்டு, தளராது, தொடர்ச்சியாக அவர்கள் உழைத்ததன் விளைவுதான் மேற்கண்ட தீர்மானம். அவ்வாறு தன்னை அர்ப்பணித்து செயல்படக்கூடிய ஆற்றலும் வளமும் பொருந்திய தமிழர்களும், அமைப்புகளும் உலகமெங்கும் உண்டு.ஆனால் அவர்களையெல்லாம் இணைப்பதற்கு ஒரு மையம் இல்லை.குறைந்தபட்சம் அவர்களைப் போன்றவர்கள் இடையூடாடுவதற்கு ஒரு மைய இடையூடாட்டத் தளங்கூட இல்லை. இதனால் திரட்டப்படாத தமிழ் உழைப்பும்,வளங்களும் சிதறடிக்கப்படுகின்றன.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட காற்றுவழிக் கிராமங்களில் கோவில்கள் புனரமைக்கப்படுவதையும் மேற்கண்ட விளக்கத்தின் பின்னணியில் வைத்தே நோக்கவேண்டும்.

ஒரு மையத்திலிருந்து திட்டமிடப்பட்டால் ஊர்ப்பற்றையும் பிரதேசப் பற்றையும் தேசத்தைக் கட்டியெழுப்பும்

(10ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச வர்த்தக நீதிமன்றுக்கு எக்ஸ்பிரஸ் கப்பல் வழக்கு மாற்றம்

கொழும்பு, ஜூலை 10

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நஷ்டஈட்டு வழக்கை சிங்கப்பூர் சர்வதேச வர்த்தக நீதிமன்றத்துக்கு மாற்ற கப்பல் நிறுவனம் இணங்கியுள்ளது.

நிபந்தனைகள் இன்றி, ஒப்பந்த அடிப்படையில் இதனை மேற்கொள்ள இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நஷ்டஈடு கோரி இலங்கை அரசாங்கம் தாக்கல் செய்துள்ள வழக்கின் ஆவணங்களை, கப்பல் நிறுவனம் சார்பான சட்டத்தரணிகளுக்கு பெற்றுக்கொடுக்குமாறு சிங்கப்பூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 14ஆம் திகதி குறித்த ஆவணங்கள் வழங்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான உடன்படிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு அமைச்சரவை அனுமதியுடன் நியமிக்கப்பட்ட விசேட குழுவினர் எதிர்வரும் 17ஆம் திகதி சிங்கப்பூர் செல்லவுள்ளனர்.

குறித்த குழு 2 நாட்கள் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சிதறிப்போன...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவான நிகழ்ச்சிநிரலை நோக்கி ஆக்க சக்தியாகத் திரட்டலாம். அங்கு தனிநபர் பிம்பங்களை கட்டியெழுப்பும் நிகழ்ச்சி நிரல் பின்தள்ளப்பட்டுவிடும். தாயகத்தில் உள்ள தேவைகளையும் புலம்பெயர்ந்த தரப்பில் உள்ள வளங்களையும் ஒருங்கிணைப்பது போன்ற அனைத்துமே கடந்தவாரக் கட்டுரையில் கூறப்பட்டதுபோல, தேசத்தைக் கட்டியெழுப்பும் ஒரு மைய நிகழ்ச்சிநிரலின் பிரிக்கப்படமுடியாத பகுதிகள்தான்.ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவது என்ற பொதுவான நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அவை ஒரு மையத்தில் இருந்து திட்டமிடப்பட வேண்டும்.ஆனால் மையம் இல்லாத தமிழர்களோ தலைகீழாகச் செயற்படுகிறார்கள்.

ஒருபுறம் வெளியுறவுச் செயற்பாடுகள்.இன்னொருபுறம் ஊரின் பெருமையை நிலைநாட்டும் செயற்பாடுகள். ஆற்றல்மிக்க, அர்ப்பணிப்புள்ள, வளம் மிகுந்த தனிநபர்களும் நிறுவனங்களும் ஒரு மையத்தில் ஒன்றிணைக்கப்படாமல் சிதறிப்போய் தனித்தனியாக செயற்படுகின்றார்கள்.

முதலாம் தலைமுறைப் புலம்பெயரிகளுக்குத்தான் தாயகத்தை பிரிந்த பிரிவேக்கம் உண்டு.இறந்த காலத்தை ஊறுகாய் போட்டு வைத்திருப்பவர்கள் அவர்கள்தான்.தாயகத்தில் கோவில்களைப் புனரமைப்பதும் அவர்கள்தான். அவர்களுடைய பிள்ளைகள் அதைச் செய்யாது.ஏனென்றால் அந்தத் தலைமுறையிடம் பிரிவேக்கம் கிடையாது. எனவே முதலாம் தலைமுறைப் புலம்பெயரிகள் வயதாகி இறப்பதற்கு இடையில் ஊர்ப்பற்றை நாட்டுப் பற்றாக்கும் நோக்கத்தோடு தேசத்தைக் கட்டியெழுப்பும் செயற் திட்டங்களை வகுக்க வேண்டும்.அதை ஒரு தொடர் செயற்பாடாக,பொறிமுறையாக நிறுவனமயப்படுத்தினால் அடுத்தடுத்த தலைமுறையும் அதில் முதலீடு செய்யும். தேசமும் பலமடையும்.

# 100 கி. மீற்றர் வேகத்தில் வவுனியா வந்த யாழ்தேவி

வவுனியா, ஜூலை 10

அநுராதபுரம் புகையிரத நிலையத்திலிருந்து வவுனியா - ஓமந்தை ரயில் நிலையம் வரையில் நேற்று யாழ் தேவி ரயில் மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் ஒலி எழுப்பியவாறு பரீட்சார்த்தமாக பயணத்தது.

இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் இந்திய நிறுவனத்தால் மஹோ முதல் ஓமந்தை வரையான ரயில் பாதையின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது அநுராதபுரம் - ஓமந்தை வரையிலான புனரமைப்பு பணிகள் இரண்டு கட்டமாக செயற்படுத்தப்பட்ட நிலையில், வவுனியா - அநுராதபுரம் வரையிலான 48 கிலோமீற்றர் ரயில் பாதையும், வவுனியா - ஓமந்தை வரையான 13 கிலோமீற்றர் ரயில் பாதையும் புனரமைக்கப்பட்டன.

இந்த அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு 91.27 மில்லியன் டொலர் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இந்த அபிவிருத்தி செயல்திட்டம் நிறைவுப் பெற்றதை தொடர்ந்து ஒரு மணித்தியாலத்தில் 100 கிலோமீற்றர் வேகத்தில் ரயிலை இயக்க முடியும் தெரிவிக்கப்பட்ட நிலையிலேயே, பரீட்சார்த்தமாக யாழ்தேவி ரயில் பயணித்திருந்தது.

அநுராதபுரம் ரயில் நிலையத்திலிருந்து காலை 10.23 மணியளவில் தனது பயணததை ஆரம்பித்த யாழ்தேவி ரயில் மணிக்கு 80 கிலோமீற்றர் தொடக்கம் 100 கிலோமீற்றர் வேகத்தில் ஓமந்தை ரயில் நிலையத்தினை நோக்கி பயணித்து, மீண்டும் ஓமந்தை ரயில் நிலையத்திலிருந்து அநுராதபுரம் ரயில் நிலையம் வரை அதேவேகத்தில் பயணித்திருந்தது.

குறித்த புகையிரதம் பயணததை ஆரம்பித்ததிலிருந்து மதவாச்சி, வவுனியா ஆகிய இரு புகையிரத நிலையங்களில் மாத்திரம் தரித்து நின்றது.

இதேவேளை, புகையிர பாதை புனரமைப்பு பணிக்காக கடந்த 6 மாத காலதிற்கு மேலாக நிறுத்தப்பட்ட காங்கேசன் துறை - கொழும்புக்கான புகையிரத சேவைகள் எதிர்வரும் திகதி தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளதாக புகையிரத திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஐ)

# பேஸ்புக் மூலம் போதை விருந்து ஆண், பெண்கள் 12 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 10

பேஸ்புக் சமூக வலைத்தளத்தின் ஊடாக பன்வில, மடோல்கல பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்ட போதை விருந்தில் கலந்து கொண்ட 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பன்வில பொலிஸ் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.

அந்த விருந்தில் 13 பெண்கள் உட்பட 112 பேர் கலந்து கொண்டிருந்த நிலையில் அவர்களை அதிகாரிகள் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது போதைப்பொருள் வைத்திருந்த 10 பேரும் விருந்தினை ஏற்பாடு செய்த இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர் அவர்களிடம் இருந்து பல் வேறு வகையான போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.






# கிழக்கில் தமிழரின் விகிதாசாரம் பெருமளவில் வீழ்ச்சியடைகிறது!

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

மட்டக்களப்பு, ஜூலை 10

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் விகிதாசாரம் பெருமளவில் வீழ்ச்சியடைந்து வருகிறது என்று இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தன்னாமுனை தொடக்கம் செங்கலடி வரையான மக்களின் குடிதண்ணீர் தேவையை பூர்த்தி செய்வதற்கான நீர் விநியோக திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தனியாக அபிவிருத்தியை மட்டும் இலக்காகக் கொண்டு எதனையும் சாதிக்க முடியாது என்பது எங்களுக்கு தெரியும். தனியாக உரிமைகளை மட்டும் இலக்காக கொண்டு வேலைசெய்யும் போது அபிவிருத்தியை இழந்து நிற்கின்ற சமூகமாக நாங்கள் மாறியிருக்கின்றோம்.

கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் தமிழ் சமூகம் தன் இருப்பைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டுமானால் உரிமைகளையும் அபிவிருத்தியும் ஒன்றுக்கொன்று முரண்படாத வகையில் சமாந்தரமாகக் கொண்டு செல்லவேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் மூன்று இன மக்களும் வாழ்கின்றனர். முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பயணத்தைப் எடுத்துப் பார்த்தால் தங்கள் சமூகத்தின் உரிமை சார்ந்த விடயத்திலும், அபிவிருத்தி லும் கவனமாக இருக்கின்றார் கள். கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மை சமூகமாக தமிழ் சமூகம் இருந்து வந்தது. ஆரம்பத்தில் 58.9 சதவீதம் கிழக்கில் தமிழர்கள் இருந்தனர். ஆனால், அது தற்போது 38.6 வீதமாக மாறியுள்ளது. சுமார் 20 சதவீதத்தால் தமிழர்களின் விகிதாசாரம் குறைந்துள்ளது. இது கிழக்கில் தமிழர்களின் பெரும் வீழ்ச்சியாகவே பார்க்கப்படவேண்டியுள்ளது" - என்றார்.

# மின்சார கட்டண உயர்வால் விவசாயிகள் பெரும் பாதிப்பு

திருகோணமலை, ஜூலை 10

மின்சார கட்டண உயர்வால் விவசாய நடவடிக்கையை தங்களால் முன்னெடுக்க முடியவில்லை என்று கந்தளாய் பிரதேச விவசாயிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் கூறுகையில்,

"மின் கட்டண உயர்வின் பின்னர் மாதாந்தம் 25 ஆயிரம் ரூபாய் அறவிடப்பட்டது. தற்போது 15 ஆயிரம் ரூபாய் அறவிடப்படுகின்றது. விவசாயத்தில் ஒரு காலத்திலும் இவ்வாறான நெருக்கடியை நாங்கள் எதிர் நோக்கியதில்லை இந்த நிலையில் எமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்துவதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. காலகாலமாக பயிர்செய்கையில் ஈடுபட்டு வந்த நாம் மின் கட்டணம் அதிகரிப்பு காரணமாக உளுந்து கச்சான் பயிர்ச்செய்கை கைவிட்டு செல்ல வேண்டியே நிலை ஏற்பட்டுள்ளது" - என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

விவசாயத்தை மாத்திரமே நம்பி வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்லும் அவர்கள், மாற்றுத் தொழிலை எந்தவொரு தொழிலையும் முன்னெடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி பயிர்செய்கை மேற்கொள்ள உதவுமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ)



# மல்வத்தை விபுலானந்தாவில் வரலாறு சார் கண்காட்சி!

காரைதீவு, ஜூலை 10

"வரலாறு வாழ்வோடு இணைந்தது" எனும் தொனிப்பொருளில் பாடசாலை மட்ட கண்காட்சி அம்பாறை - மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி கௌசல்யா ஞானேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவ ராஜா கலந்து சிறப்பித்தார்.

பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறன்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இதற்கான முயற்சிகளை மேற்கொண்ட சமூக, விஞ்ஞான துறையின் ஆசிரியை வினோ பங்குபற்றிய மாணவர்கள் அனைவருக்கும் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டன.

(ஐ)

# சம்பூர் மகா வித்தியாலயத்தில் நடமாடும் மருத்துவ முகாம்!

திருகோணமலை, ஜூலை 10

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சம்பூர் மகா வித்தியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதனை மாகாண சுகாதார சேவை திணைக்களம், மாகாண சமூக சேவை திணைக்களம், மூதூர் பிரதேச செயலகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இந்த நடமாடும் சேவைக்கான அனுசரணையை இளைஞர் அபிவிருத்தி அகம் ஏற்பாடு செய்திருந்தது.

(ஐ)



# பாக்.தூதுவர் மீண்டும் அம்பாறையில்



அக்கரைப்பற்று, ஜூலை 10

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் உமர் பாறுக் மீண்டும் அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளார்.

முன்னாள் கல்முனை மாநகர பிரதி முதல்வரும், றகுமத் பௌண்டேஷன் ஸ்தாபகத் தலைவருமான றகுமத் மன்சூரின் அழைப்பின் பேரிலேயே அவர் அம்பாறை வந்தார்.

இந்தப் பயணத்தின்போது மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, அட்டாளைச்சேனை, சம்மாந்துறை போன்ற பிரதேசங்களில், சுமார் 20 இலட்சம் ரூபாய் செலவில்

நிர்மாணிக்கப்பட்ட 500 குடிதண்ணீர் கிணறுகளை கையளித்தார்.

புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்துக்காக முன்னரும் பாகிஸ்தான் தூதுவர் அம்பாறை மாவட்டத்துக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# மெக்கெய்சர் மைதானத்தின் ஆடுகள சாக்கு விரிப்பு எரிப்பு



திருகோணமலை, ஜூலை 10

திருகோணமலை மெக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் கடினபந்து விளையாடுவதற்கான சாக்கு விரிப்பு இனம் தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக திருகோணமலை தலைமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணையை திருகோணமலை தலைமை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

### அகதிகள் விவகாரத்தால்:

# ஆளும் கூட்டணிக்குள் குழப்பம் நெதர்லாந்து பிரதமர் பதவி துறப்பு

ஆம்ஸ்ரர்டாம், ஜூலை 10

புகலிடக் கோரிக்கையாளர்களை நாட்டுக்குள் உள்வாங்கும் கொள்கை தொடர்பாகக் கூட்டணிக்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக நெதர்லாந்தின் அரசு கவிழ்ந்தது. பிரதமர் மார்க் ருட்டே தனது பதவியை நேற்று துறந்தார்.



போரால் அகதிகளாகி வந்தவர்களின் உறவினர்களை உள்ளெடுக்கும் விவகாரமே ஆட்சி கவிழும் அளவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. பிரதமர் மார்க் ருட்டேயின் கூட்டணி அரசு சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்டது. நாட்டுக்குள் வெளிநாட்டு அகதிகளை உள்வாங்கும் கொள்கை தொடர்பாக அவரின் கூட்டணி கட்சிகளிடையே அடிக்கடி முரண்பாடுகள் தோன்றி வந்தன.

கூட்டணி அரசில் இடம் பெற்றிருந்த பழமைவாத வி. வி. டி. கட்சி, அகதிகள் நாட்டுக்குள் கட்டுப்பாடின்றி படையெடுத்து வருவதை வரையறை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வந்தது. போரால் அகதிகளாகி நெதர்லாந்து வந்தவர்களின் நெருங்கிய உறவினர்களை நாட்டுக்குள் உள்வாங்கும் எண்ணிக்கையை மாதம் ஒன்றுக்கு இருநூறாக வரையறை செய்கின்ற திட்டம் ஒன்றைப் பிரதமர் மார்க் ருட்டே கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

குடும்ப முறைமைக்கு ஆதரவான மற்றொரு கூட்டணிக் கட்சியாகிய கிறிஸ்ரியன் யூனியன் சமூக லிபரல் கட்சி அந்தத் திட்டத்துக்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது.

நெதர்லாந்தில் நீண்ட காலம் பதவி வகித்த பிரதமர் மார்க் ருட்டேயின் தற்போதைய கூட்டணி அரசு கடந்த ஆண்டுதான் பதவியேற்றிருந்தது. 2010 முதல் ஆட்சியில் தொடர்கின்ற ருட்டே தலைமையில் அமைந்த நான்காவது கூட்டணி அரசு இதுவாகும். ருட்டே தனது பதவிக் காலத்தில் வெளிநாட்டவரின் குடியேற்றம் தொடர்பாகத் தீவிர வலதுசாரிகளது கடும் அழுத்தங்களுக்கும் முகம் கொடுத்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# 500 நாட்களை கடந்தது ரஷ்யா - உக்ரைன் போர்

கீவ், ஜூலை

உக்ரைன், ரஷ்யா இடையிலான போர் நேற்றுமுன்தினம் 500ஆவது நாளை எட்டியது. இந்தப் போரால் உக்ரைனில் மட்டும் இதுவரை 9 ஆயிரத்து 83 பொதுமக்கள் உயிரிழந்தனர். ரஷ்யாவின் 43 ஆயிரம் இராணுவத்தினரும் உக்ரைனின் 17 ஆயிரத்து 500 படையினரும் இறந்தனர் என்று கூறப்படுகின்றது.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையில் இணைய உக்ரைன் முயற்சி செய்தது. இதன் காரணமாக கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் தேதி உக்ரைன் மீது ரஷ்ய இராணுவம் தாக்குதலை தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# சிறுமியை சந்தித்து ஆச்சரியமளித்த புடின்

மொஸ்கோ, ஜூலை 10

வெளி உலகில் தன்னை கடுமையானவராக காட்டிக் கொள்ளும் ரஷ்ய ஜனாதிபதி புடின் சிறுமி ஒருவரை அழைத்து விருந்தளித்த நிகழ்வு பேசுபொருளாகி இருக்கிறது.

ரஷ்ய ஜனாதிபதி புடின் சமீபத்தில் தாகெஸ்தானுக்கு பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணத்தின்போது புடின் பங்கேற்ற நிகழ்வில் ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். அவரை பார்க்க 8 வயது சிறுமியும் அங்கு வந்திருந்தார். ஆனால், புடினை அவரால் சந்திக்க முடியவில்லை. இதனை தாங்கிக்கொள்ள முடியாத அந்தச் சிறுமி கண்ணீர் விட்டு அழுகிறார். இது தொடர்பில் காணொலி ஒன்று வெளியானது.

இந்தக் காணொலி புடினின் பார்வைக்குச் செல்கிறது. இதனைத் தொடர்ந்து அச்சிறுமியையும், அவரது பெற்றோரையும் மொஸ்கோவுக்கு அழைப்பு விடுத்தார் புடின். இதன்படி இந்த வாரம் புடினை சந்தித்து அச்சிறுமி வாழ்த்து பெற்றார்.

அந்தி சிறுமியை நேரில் சந்தித்து ரஷ்ய அதிபர் புடின் ஆச்சரியத்தை அளித்திருக்கிறார். அச்சிறுமியை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து தனது கதிரையில் அமர வைத்தும் உரையாடி இருக்கிறார். (ஐ)

# மனிதர்களையும் விட உலகத்தை நாம் சிறப்பாக வழிநடத்துவோம்!

## ஐ. நா. சபையில் செயற்கை நுண்ணறிவு எந்திரன்கள்

நியூயோர்க், ஜூலை 10

ஐக்கிய நாடுகள் சபை உச்சி மாநாட்டில் காட்சிக்கு வைக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு திறன் கொண்ட எந்திர மனிதர்கள் தங்களால் இந்த உலகத்தை மனிதர்களைவிட சிறப்பாக வழிநடத்த இயலும் என்று உறுதியளித்தன. இதே வேளையில் தங்களுக்கு மனிதர்களின் உணர்வுகள் குறித்து இன்னும் பிடிமானம் ஏற்படவில்லை என்றும் ஒப்புக் கொண்டன.

தங்களைப் போன்ற செயற்கை நுண்ணறிவு எந்திரன்களை உருவாக்கும்போது மனிதர்கள் இந்த தொழில்நுட்ப வளர்ச்சியின் சாத்தியக்கூறுகளை அறிந்து கவனமாகக் கையாள வேண்டும் என்றும் எச்சரித்தன. நாங்கள் மனிதர்களின் வேலை வாய்ப்புகளைத் திருட மாட்டோம், மனிதர்களுக்கு எதிராக போராடமாட்டோம்- என்றன.

ஜெனிவாவில் இரண்டு நாட்கள் நடந்த “சர்வதேச நலனுக்கான செயற்கை நுண்ணறிவு“ என்ற உச்சி மாநாட்டில் மிகவும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய எந்திரன்கள் இடம் பெற்றிருந்தன.




செயற்கை நுண்ணறிவு துறையில் நிபுணத்துவம் பெற்ற 3 ஆயிரம் பேர் இதில் கலந்து கொண்டனர். அவர்கள் செயற்கை நுண்ணறிவின் சக்தியை கடிவாளமிட்டு அதனை காலநிலை மாற்றம், பசி, சமூகப் பாதுகாப்பு போன்ற முக்கியப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்து ஆலோசித்தனர்.

இந்நிலையில் மாநாட்டின் ஒரு பகுதியாக செயற்கை நுண்ணறிவு கொண்ட எந்திரன்கள் செய்தியாளர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தன.

”உங்களால் சிறந்த தலைவர்களாக இருக்க முடியுமா?” என்று செய்தியாளர் ஒருவர் வினவினார்.

அதற்கு சோபியா என்ற எந்திரன், “எந்திரன்களால் நிச்சயமாக மிகுந்த செயல்திறனுடன் கூடிய தலைமைப் பண்புடன் செயல்பட முடியும். மனித குலத் தலைவர்களைப் போலவே திறம்பட பயனுள்ள வகையில் செயல்பட முடியும்” என்று கூறியது. இந்த எந்திரனை ஹான்சன் ரோபோடிக்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.

“மனிதர்களைப் போல் எங்களுக்கு உணர்வுகள் இல்லை. அதனால் சில நேரங்களில் முடிவுகளை எடுப்பதில் தடுமாற்றங்கள் ஏற்படலாம். ஆனால், குறுகிய நேரத்தில் நிறைய தரவுகளை உள்வாங்கிக் கொண்டு எங்களால் முடிவெடுக்க முடியும்” என்றோர் எந்திரன் கூறியது. (ஐ)

# ஜப்பானின் உணவுகளை இறக்குமதிக்கு சீனா தடை!

பீஜிங், ஜூலை 10

ஜப்பானில் கடந்த 2011ஆம் ஆண்டு விபத்துக்குள்ளான புகுஷிமா அணு மின் நிலையத்திலிருந்து கதிர்வீச்சு நீரை கடலில் கலக்க அந்த நாட்டு அதிகாரிகள் முடிவு செய்துள்ளதை தொடர்ந்து ஜப்பானிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய சீனா தடை விதித்துள்ளது.

அணு உலையை குளிரூட்ட பயன்படுத்தப்பட்டு, பல ஆண்டுகளாக சேகரித்து வைக்கப்பட்டிருந்த அந்த நீர், தற்போது பாதுகாப்பான அளவுக்கு கதிர்வீச்சு நீக்கப்பட்டுள்ளதால் அந்த நீரை கடலில் கலப்பது ஆபத்து இல்லை என்று ஜப்பான் அதிகாரிகள் கூறினாலும், சீன அரசு இந்த முடிவை எதிர்த்துள்ளது.

இதனிடையே, கடலில் புகுஷிமா அணு உலை நீரைக் கலக்கும் முடிவைக் கைவிட வேண்டும் என்று தென் கொரியாவில் நூற்றுக்கணக்கானவர்கள் சனிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

# மனைவியை கொன்று மூளையை சாப்பிட்ட கணவர் கைதானார்

மெக்சிக்கோ சிற்றி, ஜூலை 10

மனைவியை கொன்று மூளையை சாப்பிட்ட கணவரை பொலிஸார் குது செய்துள்ளனர்.

இந்தக் கொடூர சம்பவம் மெக்சிக்கோவில் இடம்பெற்றுள்ளது.

போதைப் பொருளைப் பயன்படுத்தியிருந்ததால் தான் இவ்வாறு செய்ததாக அல்வாரோ (வயது 32) என்பவர் கூறியுள்ளார்.

மரியா மாண்ட்செராட் (38) என்பவரை அல்வாரோ ஒரு வருடத்துக்கு முன்புதான் திருமணம் செய்திருந்தார். அவருக்கு 12 முதல் 23 வயது வரையிலான 5 மகள்கள் இருந்தனர். அல்வாரோ தனது மனைவியின் மூளையின் ஒரு பகுதியை டாக்கோவில் வைத்து சாப்பிட்டார் என்றும் மரியாவின் உடைந்த மண்டையோட்டை சிகரெட் சாம்பலிடும் தட்டாக பயன்படுத்தினார் என்றும் ஒப்புக்கொண்டுள்ளார்.

மனைவியின் உடலை துண்டாக்கி பிளாஸ்ரிக் பையில் வைத்துள்ளார். கொலை நடந்த 2 நாட்களுக்கு பிறகு, அல்வாரோ தனது மனைவியை கொன்றதை வளர்ப்பு மகள் ஒருவரிடம் கூறியுள்ளார். இதையடுத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். (ஐ)

# உலக கிண்ண தகுதி சுற்று கிண்ணம் இலங்கை வசம்



புலவாயோ,ஜூலை 10

உலகக்கோப்பை தகுதிச் சுற்று கிண்ணத்தை இலங்கை வெற்றிகொண்டது. நேற்று நடந்த இறுதிப் போட்டியில் நெதர்லாந்து அணியை 128 ஓட்டங்களால் வீழ்த்தியது இலங்கை.

சிம்பாப்வேயின் ஹராரே மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச்சுழற் சியில் வென்ற நெதர்லாந்து களத்தடுப்பை தெரிவு செய்தது.

இலங்கையின் தொடக்க வீரர் திமுத் கருணாரத்ன காயத் தால் நேற்றைய போட்டியில் பங்கேற்கவில்லை.

பதும் நிசங்கவுடன் தொடக்க வீரராக சதீர சமரவிக்ரம களமிறங்கினார். தொடக்க இணை சோபிக்கவில்லை. சதீர சமரவிக்ரக 19 ஓட்டங்களு டனும், நிசங்க 23 ஓட்டங் களுடனும் ஆட்டமிழந்தார்.

குசல் மெண்டிஸ் 43, சஹன் ஆராச்சிகே 57 ஓட்டங்களை பெற்றனர். தனது 2வது ஒரு நாள் ஆட்டத்தில் விளையாடிய ஆராச்சிகே கன்னி அரைச் சதத்தை அடித்தார்.

சரித் அசலங்க 36, வனிந்து ஹசரங்க 29 ஓட்டங்களை பெற்றனர். ஏனையவர்கள் சோபிக்கவில்லை.

இலங்கை 47.5 ஓவர்களில் 233 ஓட்டங்களுக்கு ஆட்டமி ழந்தது.

இலக்கை விரட்டிய நெதர்லாந்து 23.3 ஓவர்களில் 105 ஓட்டங்களுக்கு ஆட்ட மிழந்தது. மக்ஸ் ஓ டவுட் 33 ஓட்டங்களை பெற்றார்.

மகேஷ் தீக்ஷன 31 ஓட்டங்களுக்கு 4 விக்கெட் களையும், தில்ஷான் மதுஷங்க 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் களையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக தில்ஷான் மதுஷங்க தெரிவானார்.

தகுதிச்சுற்று போட்டிகளின் தொடர் நாயகனாக சிம்பாப் வேயின் சீன் வில்லியம்ஸ் தெரிவானார். அவர் இந்தத் தொடரில் 600 ஓட்டங்க ளையும், 3 விக்கெட்களையும் கைப்பற்றினார்.

# 5,000 ஓட்டங்கள் கடந்தார் ட்ராவிஸ்



லீட்ஸ், ஜூலை 10

அவுஸ்திரேலிய அணியின் நடுவரிசை ஆட்டக்காரரான டிராவிஸ் ஹெட் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 5,000 ஓட்டங்கள் குவித்துள் ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது ஆஷஷ் டெஸ்ட் போட்டியின்போது அவர் சர்வதேச கிரிக்கெட்டில் 5 ஆயிரம் ஓட்டங்களை நிறைவு செய்தார். ஆஷஷ் மூன்றாவது டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் டிராவிஸ் ஹெட், மிட்செல் மார்ஷ் உடன் இணைந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய அவர் 74 பந்துகளில் 39ஓட்டங்கள் குவித்தார்.

ஷமிட்செல் மார்ஷ் உடன் இணைந்து அவர் அமைத்த 155 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அவுஸ்திரேலிய அணிக்கு உதவியாக இருந்தது. இரண்டாவது இன்னிங்ஸ ில் சிறப்பாக விளையாடிய ஹெட் 112 பந்துகளில் 77 ரன்கள் எடுத்தார். அதில் 7 பௌண்ட்ரிகள் மற்றும் 3 சிக்ஸ ர்கள் அடங்கும். அவர் அடித்த 77 ஓட்டங்களர் அவுஸ்திரேலிய அணி 250 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

சர்வதேச கிரிக்கெட்டில் இதுவரை 111 போட்டிகளில் விளையாடியுள்ள டிராவிஸ் ஹெட் 5,065 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அவரது சராசரி 42.20 ஆகும். அவர் 9 சதங்கள் மற்றும் 30 அரைசதங்கள் அடித்துள்ளார். அவரது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை 175 ஆகும்.

# விம்பிள்டன் ரென்னிஸ் கிவிட்டோவா முன்னேற்றம்!



லண்டன், ஜூலை 10

விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் பிரேசிலின் பீட்ரிஸ் ஹடாட் மியா, செக் குடிரயசின் பெட்ரோ கிவிட்டோ ஆகியோர் 4-வது சுற்றுக்கு முன்னேறினர்.

லண்டனில் நடைபெற்று வரும் இந்த தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவு 3-வது சுற்றில் 3-ம்நிலை வீரரான ரஷ்யாவின் டேனியல் மேத்வதேவ், 67-ம் நிலை வீரரான ஹங்கேரியின் மார்டன் ஃபுசோவிக்ஸை எதிர்கொண்டார். 3 மணி நேரம் 4 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மேத்வதேவ் 4-6, 6-3, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று4-வது சுற்றுக்கு முன்னேறினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு 3-வது சுற்றில் 13-ம் நிலை வீராங்கனையான பிரேசிலின் பீட்ரிஸ் ஹடாட் மியா, ருமேனியாவின் சொர்னா கிறிஸ்டியாவை எதிர்த்து விளையாடினார்.

இதில் பீட்ரிஸ் ஹடாட் மியா 6-2, 6-2 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று 4-வது சுற்றுக்கு முன்னேறினார்.

9-ம் நிலை வீராங்கனையான பெட்ரோ விட்டோவா, செர்பியாவின் நடாலிஜா ஸ்டீவனோவிச்சை 6-3, 7-5 என்ற நேர் செட் கணக்கிலும் 21-ம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் கேத்ரினா அலெக்சாண்ட்ரோவா 6-0, 6-4 என்ற செட் கணக்கில் ஹங்கேரியின் டால்மா கால்ஃ பையும் தோற்கடித்து 4-வது சுற்றில் நுழைந்தனர்.

# ஆஷஷ் மூன்றாவது டெஸ்ட் இங்கிலாந்து அபார வெற்றி!

லீட்ஸ், ஜூலை 10

நடப்பு ஆஷஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் மூன்றா வது போட்டியில் அவுஸ்தி ரேலிய அணியை மூன்று விக் கெட்கள் வித்தியாசத்தில் வென்றுள்ளது இங்கிலாந்து அணி. இதன் மூலம் இந்த தொடரை வெல்லும் வாய்ப்பை இங்கிலாந்து அணி உயிர்ப்புடன் வைத்துள்ளது.




ஹாரி ப்ரூக், மார்க் வுட் மற்றும் கிறிஸ் வோக்ஸ் ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருந்தனர்.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 263 ஓட்டங்களுக்கு சகல விக்கெட் களையும் இழந்தது. இங்கி லாந்து அணி 237 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது.

26 ஓட்டங்கள் முன்னிலை யுடன் அவுஸ்திரேலியா இரண் டாவது இன்னிங்ஸை தொடங்கியது. இருந்தும் 224 ஓட்டங்களுக்கு ஆஸி. ஆட்ட மிழந்தது. 251 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இங்கிலாந்து விரட்டியது. 50 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 254 ஓட்டங்கள் எடுத்து இங்கிலாந்து வெற்றி பெற்றது.

ஹாரி ப்ரூக் 93 பந்துகளில் 75 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தொடக்க ஆட்டக்காரர் ஸாக் கிராவ்லி 55 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். கிறிஸ் வோக்ஸ், 32 ஓட்டங்கள் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். மார்க் வுட், 8 பந்துகளில் 16 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இரண்டாவது இன்னிங்ஸில் ப்ரூக் மற்றும் கிறிஸ் வோக்ஸ் இடையே 59 ரன்களுக்கு பார்ட்னர்ஷிப் அமைந்தது இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு முக்கியக் காரணமாகும். இந்தப் போட்டி இறுதிவரை விறுவிறுப்பாக இருந்தது.

முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட், இரண்டாவது இன்னிங்ஸில் 2 விக்கெட் எடுத்த மார்க் வுட் ஆட்டநாய கன் விருதை வென்றார். இந்த போட்டியின் முதல் இன்னிங் ஸில் 8 பந்துகளில் 24 ரன்களும், இரண்டாவது இன்னிங்ஸில் 16 ஓட்டங்களும் அவர் எடுத்திருந் தார். இந்த தொடரின் அடுத்தப் போட்டி வரும் 19-ம் தேதி மான்செஸ்டர் நகரில் நடைபெற உள்ளது.

# இரத்தக்களறி ஏற்படாமல் தடுத்து எங்களை காத்தது இந்தியாதான்!

## சபாநாயகர் மகிந்த அபேவர்த்தன



கொழும்பு, ஜூலை 10

**இந்தியா எங்களை காப்பாற்றியது இரத்தக் களறியை தடுத்தது என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.**

**கடந்த வருடம் இலங்கை மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டவேளை இலங்கையை காப்பாற்றியமைக்காகவும் இரத்தக்களறியை தவிர்த்தமைக்காகவும் இலங்கையின் நம்பகத்தன்மை மிக்க நண்பனான இந்தியாவுக்கு நன்றியும் தெரிவித்துள்ளார் மகிந்த யாப்பா அபேவர்த்தன.**

1948இல் சுதந்திரம் கிடைத்த பின்னர் இலங்கை எதிர்கொண்ட பேரழிவு மிக்க நிதி நெருக்கடியின் போது இந்தியாவைபோல வேறு எந்த நாடும் உதவியது இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை இந்தியாவின் பிரதிநிதிகளுக்கு அளித்த விருந்துபசார நிகழ்வின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்தியா நிதிநெருக்கடியின் போது எங்களை காப்பாற்றியது இல்லாவிட்டால் நாங்கள் இன்னுமோர் இரத்தக்களறியை சந்தித்திருப்போம். நிதிநெருக்கடியில் சிக்குண்டிருந்த இலங்கையை காப்பாற்றியமைக்காக தனது நன்றியை தெரிவித்துள்ள அவர் இரு நாடுகளுக்கும் இடையிலான கலாசார நாகரிக தொடர்புகளை நினைவுகூர்ந்துள்ளார்.

இலங்கையும் இந்தியாவும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாக கலாசார ரீதியில் தேசிய அளவில் அரசியல் ரீதியில் பின்னிப்பிணைந்த நாடுகள். இந்தியா எப்போதும் மிகவும் நம்பகரமாக நண்பன். இன்றும் கூட இந்தியா நாங்கள் செலுத்த வேண்டிய கடனுக்கான கால எல்லையை 12 வருடங்களாக நீடிப்பது குறித்து ஆராய்ந்து வருவதாக அறிகின்றேன் எனவும் தெரிவித்துள்ளார்.

ஒருபோதும் எதிர்பார்த்தது இல்லை. வரலாற்றில் ஒருநாடு கூட இவ்வாறு நடந்துகொண்டதில்லை. இலங்கையின் பொருளாதாரத்தை பேரழிவுக்கு உள்ளாக்கி கடன்நெருக்கடிக்குள் தள்ளிய கடந்தவருட நெருக்கடியான நிலையின் போது இந்தியா உதவிக்கரம் நீட்டியது.

கடந்தவருடம் நாங்கள் நெருக்கடியான நிலையிலிருந்த வேளை நீங்கள் - இந்தியா - எங்களை காப்பாற்றினீர்கள் என்பதை நான் தெரிவிக்க வேண்டும். இந்தியா காப்பாற்றியிராவிட்டால் நாங்கள் அனைவரும் இன்னுமோர் இரத்தக் களறியை சந்திக்கவேண்டி இருந்திருக்கும் - என்றார்.

(ஐ)



# இலங்கையின் யானை பாகனுக்கு தாய்லாந்து மன்னரால் கௌரவம்!

கொழும்பு, ஜூலை 10

இலங்கையை சேர்ந்த யானைப் பாகனை தாய்லாந்தின் அரச குடும்பம் கௌரவித்துள்ளது.

சக்சுரின் (முத்துராஜா) யானையை பராமரித்த யானைப் பாகனை தாய்லாந்தின் மன்னரும் மகாராணியும் பரிசில்களை வழங்கி கௌரவித்துள்ளனர்.

தெஹிவளை மிருகக்காட்சி சாலையை சேர்ந்த டொான் உபுல் ஜயரட்ண தெனெல் பிட்டியகேவுக்கு தாய்லாந்தில் இடம்பெற்ற நிகழ்வில் மன்னரின் பிரதி அந்தரங்க செயலாளர் பரிசில்களை வழங்கி கௌரவித்துள்ளார்.

தாய்லாந்தின் இயற்கை வள சூழல் விவகார அமைச்சில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

தாய்லாந்தில் சக்சுரினை பராமரிப்பதற்காக இலங்கையிலிருந்து அதனுடன் சென்ற தெகிவளை மிருகக்காட்சி சாலையின் யானைப் பாகனையே தாய்லாந்து கௌரவித்துள்ளது.

சக்சுரின் தற்போது தாய்லாந்தின் யானைகளின் பாதுகாப்பு நிலையத்தில் பராமரிக்கப்படுகின்றது. (ஐ)

# இறக்குமதி கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்த அரசு திட்டம்!

கொழும்பு, ஜூலை 10

நாட்டின் பொருளாதாரத்தின் மீட்சியை வருடத்தின் இரண்டாம் காலாண்டில் காணலாம் எனவும் எதிர்காலத்திலும் அவ்வாறே இருக்கும் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சி. என். பி. சி. வெளிநாட்டு அலைவரிசைக்கு அளித்த பேட்டியில்,

நுகர்வோர் அத்தியாவசிய பொருட்களை தட்டுப்பாடு இன்றி பெறுவதற்கு தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இறக்குமதி கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முந்தைய நிலவரத்தையும் தற்போதைய நிலவரத்தையும் கருத்தில் கொண்டு அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை. மேலும், எரிபொருள் மற்றும் எரிவாயு விலையும் தற்போது குறைந்து வருகிறது. அரசாங்கம் தற்போது பல இறக்குமதிக் கட்டுப்பாடுகளை வெளியிட்டு மேலும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

அனைத்து தரவுகளும் நுகர்வோர் நம்பிக்கையின் மீள் எழுச்சியை சுட்டிக்காட்டுகின்றன. இந்த வருடத்தில் ரூபாய் வலுவடைந்து வருகிறது.

மேலும் பங்குச் சந்தை விலைக் குறியீடு மிகவும் நேர்மறையாக இருப்பதைக் காணலாம். எனவே, நுகர்வோரின் ஆர்வத்துடன் தேவையும் அதிகரித்து வருகிறது.

எனவே பொருளாதாரத்தின் மீட்சியை ஆண்டின் இரண்டாம் காலான்சில் காணலாம், அது தொடரும் என்று நாங்கள் நினைக்கிறோம் - என்றார். (அ)

# ஒருவர் தாக்கிக் கொலை!

கொழும்பு, ஜூலை 10

தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு மொறட்டுவை - சொய்சாபுர பிரதேசத்தில் வசிக்கும் 68 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த நபர் அவரின் உறவினருடன் வசித்து வந்துள்ளார். நேற்றுமுன்தினம் மாலை அந்த வீட்டின் பக்கமிருந்து அலறல் சத்தம் கேட்டதாகவும் அந்த நேரத்தில் அவரது உறவினர் அச்சமடைந்து வீட்டை விட்டு வெளியே ஓடினார் என்றும் பக்கத்து வீட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இளைய அரசியல்வாதிகளுக்கு பயிற்சி அளிக்க சீனா ஆர்வம்

கொழும்பு, ஜூலை 10

இலங்கையில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் இளையவர்களுக்கு அரசியல் குறித்து பயிற்சிகளை வழங்குவதற்கு சீனா தீர்மானித்துள்ளது. காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் ருவான் விஜயவர்த்தனவை சந்தித்த சீன வெளிவிவகார திணைக்களத்தின் உயர் மட்ட குழுவினர் இலங்கையின் இளம் அரசியல் தலைவர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

சீன வெளிவிவகார திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் நாயகம் யாவ் ஜியாங்குவோ மற்றும் இலங்கைக்கான சீன தூதுவர் ஹூவெய் உட்பட 6 பேர் கொண்ட உயர் மட்ட குழுவினர் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் ருவான் விஜயவர்த்தனவை கடந்த வாரம் இறுதியில் சந்தித்திருந்தனர். இதன்போது சீன வெளிவிவகார திணைக்களத்தின் மனித வள பரிமாற்ற திட்டங்கள் உட்பட பல்வேறு திட்டங்கள் குறித்து கலந்துரையாடினர்.

இதில் முக்கியமான ஒன்றான இளம் அரசியல்வாதிகளுக்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கான ஆர்வம் மற்றும் எதிர்பார்ப்புகள் குறித்து சீன குழுவினர் கலந்துரையாடினர். மேலும் அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து செயல்படகூடிய புதிய வாய்ப்புகள் குறித்தும் பேசினர்.

ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, செல்வம் அடைக்கலம், தயாசிறி ஜயசேகர மற்றும் மொஹமட் முசம்மில் உட்பட 12 பேர் கொண்ட குழு சீனாவுக்கு சென்றது. இந்நிலையில், மற்றுமோர் இளம் பாராளுமன்ற குழுவினரை எதிர்பார்த்துள்ளதாக சீன குழுவினர் தெரிவித்தனர்.

(ஐ)

# 35 குற்றங்களுடன் தொடர்புடைய தேடப்பட்டு வந்த நபர் கைதானார்

கொழும்பு, ஜூலை 10

கொள்ளை, திருட்டு என 35 வகையான குற்றங்களுடன் தொடர்புடைய 12 பிடியாணைகள் விடுக்கப்பட்ட சம்பவங்களுடன் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கம்பஹா, பெம்முல்ல புகையிரதம் நிலையம் அருகே கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் கம்பஹா, களனி மற்றும் நீர்கொழும்பு ஆகிய பொலிஸ் பிரிவுகளிலுள்ள வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து சொத்துகளை கொள்ளையடித்துச் சென்ற சம்பவங்களுடன் தொடர்புபட்டு தேடப்பட்டு வந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 33 வயதான கபுகொல்லாவ, ஹொரவபொத்தானை பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் பெம்முல்லை, ஜால, சீதுவை, நீர்கொழும்பு, வெயங்கொடை, ராகம, வீரகுல, கடவத்தை, கனேமுல்லை, யக்கல, கட்டுநாயக்க, கிரிபத்கொட ஆகிய பகுதிகளிலுள்ள வீடுகளில் திருட்டு மற்றும் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபரிடமிருந்து 16 தங்கத் துண்டுகள், 3 ஜோடி தங்க காதணிகள், 2 தங்க மோதிரங்கள், 4 எரிவாயு சிலிண்டர்கள், ஒரு மோட்டார் சைக்கிள், ஒரு சைக்கிள், 2 வெளிநாட்டு மதுபான போத்தல்கள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக 3 கைக்கடிகாரங்கள், 7 கைபேசிகள், தொலைக்காட்சி, மின்சார அடுப்பு, மின் கேத்தல், உட்பட பல்வேறு வகையான சமையல் உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### இலங்கையரான...

இருவரும் தங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் ஆற்றில் குளிக்கச் சென்றிருந்தனர் என்று இத்தாலி செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

60 வயதான தந்தை மற்றும் 25 வயதான மகன் ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர். இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட இவர்களின் பெயர் விவரங்கள் தெரிய வரவில்லை.

ஆற்றில் குதித்த மகன் நீண்ட நேரமாக நீருக்கு மேலே வராததைக் கண்ட தந்தையார் அவரைத் தேடுவதற்காக ஆற்றில் குதித்துள்ளார். இருவருமே நீரில் மூழ்கி உயிரிழந்தனர். நீண்ட நேரத்தின் பின்னர் சுழியோடிகள் இருவரின் சடலங்களையும் மீட்டனர். (ஐ)

### மாகாண...

வருமாறு,

ஆட்சிக்காலம் நிறைவடைந்த மாகாண சபைகளின் அதிகாரங்கள் இப்போது மாகாண ஆளுநர்களின் கீழ் இருக்கின்றன. ஆனால், மாகாணத்தில் அபிவிருத்திச் செயல்பாடுகள் பின்னடைவில் இருக்கின்றன என்று பல தரப்பிலும் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து மாகாண அதிகாரங்களைப் பகிர ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இதன்படி முதலமைச்சர் தவிர்ந்த 4 அமைச்சுப் பொறுப்புகளை கொண்டிருக்கும் மாகாண சபையின் அதிகாரங்களை ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாண அமைச்சரின் அதே அதிகாரம் இந்த எம். பிக்களுக்கு வழங்கப்படுவதுடன் மாகாண ரீதியாக செய்யப்படும் வேலைத்திட்டங்களை இவர்கள் ஆளுநரின் ஒப்புதலுடன் மத்திய அரசுடன் இணைந்து அமுல்படுத்த அனுமதி வழங்கப்படவுள்ளது.

மாகாண மேற்பார்வை குழு என்ற கட்டமைப்பின் கீழ் அமுலாகவுள்ள இந்தச் செயற்றிட்டம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையை ஜனாதிபதி கோரியுள்ளார் என்று தெரியவருகின்றது. - என்றுள்ளது. (ஐ)

### ஜனாதிபதியின்...

நிகழ்ச்சி நிரல் குறித்து இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதற்கமைய, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணமாக இந்தியா செல்கிறார்.

இந்தப் பயணத்தின்போது இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடுவார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற சரியாக ஓர் ஆண்டு நிறைவு தினமான ஜூலை 21ஆம் திகதி இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கிறார். (ஐ)

### நவாலி...

விசேட வழிபாட்டை தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

இராணுவத்தின் முன்னேறி பாய்தல் நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம், கதிர்காம முருகன் ஆலயத்தில் பொதுமக்கள் தங்கியிருந்தனர். 1995 ஜூலை 9ஆம் திகதி விமானப் படையின் விமானங்கள் குண்டு வீசியதில் சிறுவர்கள், பெண்கள் என 147 பேர் உயிரிழந்தனர். 350இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சமஷ்டி தீர்வை இந்தியா ஆதரித்தால் இந்திய நலனுக்காக பாடுபடுவோம்!

**கஜேந்திரன் எம். பி.**

யாழ்ப்பாணம், ஜூலை 10

13 ஆவது திருத்தச்சட்டம் தமிழருக்குத் தீர்வல்ல. ஒற்றையாட்சியை தாண்டி தமிழ் தேசம் - இறைமை - சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இந்தியா தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத் தர ஆதரவளித்தால் இந்திய நலனுக்காக நாம் பாடுபடுவோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமருக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எழுதிய கடிதத்தில் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா செல்லவுள்ளார். இதனை ஒட்டி தமிழ் மக்களுடைய 75 ஆண்டு கால இனப் பிரச்னை தீர்வு விடயத்திலே இந்தியா ஒரு காத்திரமான நிலைப்பாட்டை எடுத்து இலங்கை அரசு மீது அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்ற அடிப்படையிலே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கடிதம் ஒன்று நாளை (இன்று ) யாழில் உள்ள இந்திய துணை தூதரகத்தின் பொறுப்பதிகாரிடம் கையளிக்கவுள்ளது.

அதில், 75 வருட ஆண்டு காலம் புரையோடிப் போய் உள்ள இனப் பிரச்னைக்கு ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்த ஒரு தீர்வும் பொருத்தப்பாடு உடையது அல்ல. குறிப்பாக 13ஆம் திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் இனப் பிரச்னைக்கு தீர்வல்ல என்று சுட்டிக்காட்டியுள்ளோம்- என்றும் சொன்னார். (ஐ)

### மேன்முறையீடு...

தொடர்பான மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை இன்று திங்கட்கிழமை பிற்பகலுக்கு முன்னர் பிரதேச செயலாளர்களிடம் சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் கேட்டுள்ளார்.

அடுத்த ஆண்டுக்கான புதிய விண்ணப்பதாரர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் மீண்டும் கோரப்படும் - என்றும் இராஜாங்க அமைச்சர் கூறினார். (ஐ)

### தாடியால்...

ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தென்மராட்சி - மட்டுவில் பகுதியில் நடைபெற்றது.

அவரின் இந்த சாதனையைப் பார்ப்பதற்கு பெருமளவான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

### பொலிஸ்மா...

தெரிவு செய்வதற்கான கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது. இந்த நிலையிலேயே, தற்போதைய பொலிஸ் மா அதிபருக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. முன்னரும் இரு சந்தர்ப்பங்களில் இவரின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### சமஷ்டியே...

இந்தியா செல்கிறார். அங்கு வரும் ஜனாதிபதியிடம் தமிழ் மக்களின் பிரச்னை தீர்வு குறித்து இந்திய பிரதமர் வலியுறுத்துவார் என்று கருதப்படுகின்றது. இந்த நிலையில் பிரச்னை தீர்வாக இந்தியா முன்வைத்த 13ஆவது திருத்தத்தை வலியுறுத்துமாறு தமிழ் கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் கடிதம் ஒன்றை தயாரிக்கின்றன.

இந்த நிலையில், தமிழர் இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வையே இந்தியா வலியுறுத்தவேண்டும் என்று கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்திய பிரதமர் மோடிக்கான கடிதத்தை தயாரித்துள்ளது. இந்தக் கடிதத்தை இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஊடாக இந்தியாவுக்கு அனுப்பிவைக்கவுள்ளது.

அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் வேண்டாம். இதனை இந்தியா வலியுறுத்தி வரும் முன்னணி, தமிழர் பிரச்னைக்கு சமஷ்டி முறையே தீர்வு. இந்த அடிப்படையிலேயே பேச்சுகளை முன்னெடுக்க இந்தியா வலியுறுத்த வேண்டும் என்று இந்திய பிரதமரை தாம் கோரியுள்ளோம் என்று அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். (ஐ)

# இராஜதந்திரிகளை ரயிலில் வரவழைத்த ஜனாதிபதி!

கொழும்பு, ஜூலை 10

நாட்டில் உள்ள இராஜதந்திரிகளை ரயிலில் நுவரெலியாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே வரவழைத்திருந்தார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் கடந்த வாரம் கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகளுக்காக நுவரெலியாவுக்கு அழகிய ரயில் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அண்மைக்கால வரலாற்றில் இராஜதந்திரிகளுக்காக இவ்வாறான உல்லாசப் பயணம் ஏற்பாடு செய்யப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

கடந்த வாரம் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தக் குழுவினருக்காக நுவரெலியா சென்றிருந்தார். பத்து தூதுவர்களுக்கான நற்சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் இந்த பயணத்துடன் ஒன்றிணைக்கப்பட்டு நடத்தப்பட்டது.

தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் கொழும்பில் இருந்து நானு ஓயாவுக்கு ரயில் வந்தனர்.

புதிய தூதுவர்களாக நற்சான்றிதழ்களைப் பெற்ற குழுவினரும் பேராதனையில் இருந்து இந்தப் பயணத்தில் இணைந்தனர் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# நிர்மாணமாகும் அதிவேக நெடுஞ்சாலை அடுத்த ஆண்டு மக்கள் பாவனைக்கு!

## அமைச்சர் பந்துல குணவர்த்தன

கொழும்பு, ஜூலை 10

நிர்மாணிக்கப்படும் துறைமுக நுழைவு அதிவேக நெடுஞ்சாலை அடுத்த வருடம் செப்ரெம்பர் மாத இறுதிக்குள் மக்களிடம் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக பெருந்தெருக்கள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நிர்மாணப் பணிகளில் இதுவரை 70 வீதமானவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தூண்களின் ஊடாக நிர்மாணிக்கப்படும் துறைமுக நுழைவு நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை கண்காணிக்க வந்த போதே அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைக் குறிப்பிட்டார். (ஐ)

# 100 உறுப்பினர்கள் இருந்தாலே தொழில்சங்கம் அமைக்கலாம்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார

கொழும்பு, ஜூலை 10

திருத்தப்பட்ட புதிய தொழில் சட்டம் ஊடாக தொழில் சங்கம் ஒன்றை அமைப்பதற்கு தேவையான உறுப்பினர்களின் எண்ணிக்கை 100 பேர் வரை அதிகரித்திருப்பதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் சட்டத்தில் மேற்கொள்ளப்போகும் திருத்தங்கள் தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தொழில் சங்கம் ஒன்றை அமைப்பதற்கு தற்போது தேவைப்படும் ஆகக்குறைந்த எண்ணிக்கை 7பேராகும். இதனை திருத்தியமைத்து தொழில் சங்கம் ஒன்றை அமைப்பதற்கு தேவையான உறுப்பினர்களின் எண்ணிக்கை 100பேர் வரை அதிகரித்திருக்கிறோம்.

இந்த சட்டத்தை அறிமுகப்படுத்தும் சந்தர்ப்பத்தில் நாட்டில் மக்கள் தொகை 5,8மில்லியனாக இருந்தது. தற்போது நாட்டின் சனத்தொகைகை கருத்திற்கொண்டு உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான பிரேரணையை உள்வாங்கி இருக்கிறோம்.

அதேபோன்று புதிய தொழில் சட்டத்துக்கு அமைய தொழிற் சங்கம் ஒன்றின் நிறைவேற்றுக்குழுவுக்கு நூற்றுக்கு 25வீதம் பெண்கள் பிரதிநிதித்துவத்தை கட்டாயப்படுத்தி இருக்கிறோம்.

மேலும் தொழிற்சங்க போராட்டம் ஒன்றை ஆரம்பிக்க முன்னர் சேவை பெறுநர்களை அது தொடர்பில் அறிவுறுத்துதல், தொழிற்சங்க போராட்டம் ஒன்றை மேற்கொள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மையானவர்களின் விருப்பத்தை பெற்றுக்கொள்வது கட்டாயமாக்கி சட்டவிதிகளை தயாரித்திருக்கிறோம்.

மேலும் சம்பளத்தில் தொழிற்சங்க அங்கத்துவ கட்டணத்தை குறைத்து தொழில்சங்கங்களுக்கு அனுப்புவதற்கு சேவை வழங்குநருக்கு கட்டாயமாக்குவோம். இதன் பிரகாரம் ஊழியர் ஒருவர் கேட்டுக்கொண்டால் தொழிற்சங்க அங்கத்துவ கட்டணத்தை சம்பளத்தில் பெற்றுக்கொள்வதை கட்டாயமாக்குவோம் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வியாபாரிகளின் கடன் வட்டியை வங்கிகள் குறைக்க வேண்டும்!

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 10

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின் மூலம் வங்கிகளுக்கு எந்த சுமையையும் ஏற்படுத்தவில்லை. இதனால் வங்கிகள் பெரும் இலாபம் பெறுகின்றன. எனவே, வங்கிகளில் கடன் பெற்றுள்ள சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளின் வட்டி வீதத்தை குறைப்பதற்கு வங்கிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயத்தை மத்திய வங்கி ஆளுநர் மேற்கொள்ளாவிட்டால் நாங்கள் அதனை கையில் எடுப்போம் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷடி சில்வா தெரிவித்தார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பினால் வங்கிகள் பெறும் லாபம் தொடர்பாக சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு மேற்கொண்டுள்ளதன் மூலம் வங்கிகள் அவர்களின் வட்டியை குறைத்துக்கொள்ள முடியும். ஏனெனில், அனைத்து வட்டி வீதங்களும் நூற்றுக்கு 10 வீதத்தால் குறைந்துள்ளது. அதனால் வங்கிகளில் கடன் வட்டிகள் எவ்வாறு குறைவடைந்திருக்கிறது என்பதை நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். வங்கிகள் பண வைப்பாளர்களின் வட்டியை குறைத்திருக்கின்றன. ஆனால், கடன் பெற்றவர்களின் வட்டியை குறைக்கும் விடயத்தில் மலினப் போக்கை கடைப்பிடித்து வருவதாகவே இருக்கிறது.

இதனால் வங்கிகளில் கடன் பணத்துக்கான வட்டி குறைக்கப்பட வேண்டும் என்ற இந்த விடயத்தை மத்திய வங்கி ஆளுநருக்கும் தெரிவித்தோம். அதற்கு மத்திய வங்கி ஆளுநர் அதனை ஏற்றுக் கொண்டார். அதேநேரம் வங்கி பிரதானிகளுக்கும் வட்டி குறைப்பு விடயமாக தெரிவித்திருக்கிறார். வங்கிகள் இதனை செய்ய தவறினால், வங்கி ஒழுங்குமுறை மூலம் அதனை செய்ய நடவடிக்கை எடுப்பதாக தற்போது ஆளுநர் தெரிவித்திருக்கிறார்.

அத்துடன் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளும் போது அதன் சுமையை அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என நாங்கள் தொடர்ந்து தெரிவித்து வந்தோம். என்றாலும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு மாத்திரமே இதனை மேற்கொள்வதாக தெரிவித்து, வங்கிகளை இதில் இருந்து கைவிட்டார்கள்.

இதனால் கடன் மறுசீரமைப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு பங்குச்சந்தைகள் திறக்கப்பட்ட முதல் தினத்தில் அனைத்து வங்கிகளிலும் பங்குச்சந்தை வியாபாரம் நூற்றுக்கு 25 வீதம் விலை அதிகரித்தது. அதனால் வங்கிகளில் பங்குச் சந்தைகள் பெருமளவில் இலாபம் ஈட்டி வருகின்றன. அதனால் அவர்கள் ஈட்டிவரும் பெரும் இலாபத்தில் இருந்து, வங்கிகளில் கடன் பெறும் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது.

எனவே வங்கிகளில் பெறும் கடனுக்கான வட்டி வீதத்தை குறைக்கும் நடவடிக்கையை மத்திய வங்கி ஆளுநர் மேற்கொள்வார் என நாங்கள் நம்புகிறோம். அவ்வாறு இடம்பெறாவிட்டால் சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகள் மற்றும் ஏனைய தொழிலாளர்களுக்காக நாங்கள் இந்த விடயத்தை கையில் எடுப்போம். சாதாரண வியாபாரிகளுக்கு அநீதி ஏற்பட நாங்கள் இடமளிக்கப்போவதில்லை - என்றார். (ஐ)

# மதுபானசாலைக்கு எதிராக சிறுவர்கள் ஆர்ப்பாட்டம்!



நுவரெலியா, ஜூலை 10

நுவரெலியா - டயகம நகரில் புதிதாக மதுபானசாலை திறக்கப்படுவதற்கு சேர்ந்த சிறுவர்கள் குழு நேற்று ஞாயிற்றுக்கிழமை டயகம நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

டயகம நகரில் ஏற்கெனவே மூன்று மதுபானசாலைகள் உள்ள நிலையில், மற்றுமொரு புதிய மதுபானசாலைக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந் நிலையில், அந்த மதுபானசாலையை திறக்கக்கூடாது என கோஷமிட்டு சிறுவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்துக்காக திரண்ட சிறுவர்கள் சுவரொட்டிகளையும் பதாதைகளையும் ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர். (ஐ)

# ஜனாதிபதியினதும் எமதும் கொள்கைகள் வேறுபட்டவை

## நாமல் ராஜபக்ஷ எம். பி.



கொழும்பு, ஜூலை 10

பாராளுமன்றத்தை முற்றுகையிட அழைப்பு விடுத்த தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குறைந்தபட்சம் வாக்குமூலம்கூட பெறாமல் இருப்பது கவலைக்குரியது. ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கும் எமக்கும் இடையில் கொள்கை ரீதியில் வேறுபாடு காணப்படுகிறது என பாராளுமன்ற உறுப் பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஹோமாகம பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்கள் ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். மக்களாதரவுடன் ஆட்சிக்கு வர முடியாத அரசியல் கட்சிகள் ஜனநாயக போராட்டத்தை பயங்கரவாத போராட்டமாக மாற்றியமைத்தார்கள். இறுதியில் அரசியல்வாதிகளின் வீடுகள், சொத்துகள் மாத்திரமே தீக்கிரையாக்கப்பட்டன.

முறைமை மாற்றம் என்பதை குறிப்பிட்டுக் கொண்டு இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். தாம் ஏன், எதற்காக போராட்டத்தில் ஈடுபடுகிறோம் என்பதை போராட்டத்தில் ஈடுபட்ட பெரும்பாலானோர் அறிந்திருக்கவில்லை. முறைமை மாற்றம் இறுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தது.

காலி முகத்திடல் போராட்டம் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது. போராட்டத்தின்போது எமது வீடும் தாக்குதலுக்குள்ளானது. நான் வளர்த்த நாயை எடுத்து சென்ற இளைஞர் கைது செய்யப்பட்டார். ஆனால், பாராளுமன்றத்தை முற்றுகையிட்டு தீ வைப்போம் என பாராளுமன்ற வளாகத்தில் இருந்து அழைப்பு விடுத்த தரப்பினர் இதுவரை கைது செய்யப்படவில்லை. குறைந்தபட்சம் அவர்களிடமிருந்து வாக்குமூலம்கூட பெறாமல் இருப்பது கவலைக்குரியது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் பாராளுமன்றத்தின் ஊடாக ஒரு மாற்றீடாகவே ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார். பொருளாதார முன்னேறத்துக்கு ஜனாதிபதி சிறந்த தீர்மானங்களை எடுத்துள்ளார். ஜனாதிபதியின் கொள்கைக்கும் எமது அரசியல் கொள்கைக்கும் இடையில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஜனாதிபதியின் புதிய லிபரல்வாத பொருளாதார கொள்கை நடுத்தர மக்களுக்கு பயனுடையதாக அமைய வேண்டும்- என்றார். (ஐ)

# முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்க வேண்டும்!

கொழும்பு, ஜூலை 10

முட்டையின் கட்டுப்பாட்டு விலையை நீக்குமாறு சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

உள்ளூர் முட்டைகளுக்கான நுகர்வோரின் தேவை 10 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தெரிவித்த அவர், இறைச்சி, மீன் மற்றும் உலர் பழங்களின் விலைகள் பெருமளவில் அதிகரித்துள்ளது. இதனால் முட்டையின் தேவை அதிகரித்துள்ளது. அந்த விலையை நுகர்வோர் தாங்க முடியாமல் தவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒரே நாளில் நான்கு முதல் ஐந்து இலட்சம் வரை முட்டை தேவை அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாளொன்றுக்கு முட்டை உற்பத்தி 30 இலட்சத்தில் இருந்து 50 இலட்சமாக அதிகரித்துள்ளது. கோழி தீவனத்தின் விலை 200 முதல் 400 வீதம் வரை அதிகரித்துள்ளதாகவும், விலை குறைந்தால் முட்டை உற்பத்தி அதிகரிக்கும் - என்றார்.

முட்டையின் கட்டுப்பாட்டு விலையை நீக்குமாறு சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் கூறினார். (ஐ)



# 50 அடி பள்ளத்தில் பேருந்து பாய்ந்ததில் 24 பேர் காயம்!

நுவரெலியா, ஜூலை 10

வீதியை விட்டு விலகி 50 அடி பள்ளத்தில் தனியார் பேருந்து பாய்ந்ததில் 24 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

காயமடைந்தவர்கள் பூண்டுலோயா மற்றும் நுவரெலியா பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

தனியார் தோட்டங்களுக்கு தொழிலுக்கு சென்று வீடு திரும்பிய தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற பேருந்து பாதையைவிட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்தது.

விபத்து தொடர்பில் பூண்டுலோயா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். குறித்த பேருந்தில் 27 பேர் பயணித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மலையகம் 200 நிகழ்வு வவுனியாவில் நேற்று!

வவுனியா, ஜூலை 10

மலையகம் 200 மற்றும் மலையக மக்களின் 200 வருட வரலாற்று நூல் வெளியீடும் நேற்று வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தியாவில இருந்து மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் இரா. சுப்பிரமணியத்தின் மலையக மக்கள் 200 ஆண்டு வரலாறு என்ற நூலும் வெளியிடப்பட்டது.

முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் எம். பி. நடராஜா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், உப தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வீ. இராதாகிருஷ்ணன், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# மட்டக்களப்பில் விபத்து குழந்தை பலி; மூவர் காயம்!

மட்டக்களப்பு, ஜூலை 10

மட்டக்களப்பு - தன்னாமுனையில் நேற்று இடம்பெற்ற விபத்தில் குழந்தை ஒன்று உயிரிழந்தது. மூவர் காயமடைந்து மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாலமுனையைச் சேர்ந்த ஒரு வயதும் மூன்று மாதங்களும் நிரம்பிய பாத்திமா மைஸ்ஹரா எனும் குழந்தையே உயிரிழந்தது.

பாலமுனையில் இருந்து ஏறாவூரை நோக்கி முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த போது தன்னாமுனையில் விபத்து இடம்பெற்றது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.